Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10..00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 01 வெள்ளிக்கிழமை (16.11.2012) பக்கங்கள் 20 ஓசை - 047

விஷானி நகை மாளிகை



மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு

இல. 187, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

0212219510 (C/1675)

விலை அதிகரிப்பு



04

மீட்பு!



06

பயணம்!



09

இணைவு!




17

எச்சரிக்கை!



18

# கடமை தவறியது ஐ.நா. ஒப்புக்கொள்கிறார் பான் கீ மூன்



(ஜெனிவா)

வடக்கில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது தனது கடமை மற்றும் பொறுப்புக்களிலிருந்து ஐ.நா. சபை விலகியிருந்து விட்டது என்பதை ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் முதற்தடவையாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

வன்னி யுத்த காலத்தில் ஐ.நா. சபை அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்பது குறித்தும் அக்காலப்பகுதியில் அவர்களின் நடவடிக்கை மற்றும் கடமைகள் குறித்து உள்ளக ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அதன் இறுதி அறிக்கை தற்போது பான் கீ மூனிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. இதனைத் தொடர்ந்தே அவர் மேற்படி விடயத்தை வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பில் ஐ.நா. அதிகாரிகள் தமது தனது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## தாளையடியில் விபத்து; கிறிஸ்தவ பாதிரியார் பலி

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் முல்லைத்தீவு உதவிப் பங்குத்தந்தை உயிரிழந்தார்.

மருதங்கேணி - தாளையடி வீதியால் ஏ - 9 வீதிக்கு சென்றுகொண்டிருந்த உதவிப் பங்குத்தந்தை வீதியிலிருந்த வேகத்தடையை அவதானிக்காது மோட்டார் சைக்கிளில் சென்றமையால் தூக்கி வீசப்பட்டு உயிரிழந்துள்ளார்.

கீதபொன்கலம் லக்ஷ்மன் (வயது - 33) என்ற முல்லைத்தீவு பங்குத்தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய நாடுகள் மாநாட்டை புறக்கணிக்குமா பிரித்தானியா?

### வலுவடைகிறது கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்க வேண்டாம் என பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மனித உரிமை மற்றும் அரசியல் உரிமை விவகாரங்களில் மெய்யாகவே அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது என்பது தொடர்பில் நம்பகமானதும், சுயாதீனமானதுமான உறுதிப்படுத்தல்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## இன முரண்பாடுகளின் மத்தியில் முன்னேற்றம் காணமுடியாது

(கொழும்பு)

இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் அகற்றப்படாத வரைக்கும் நாட்டில் நாம் எந்த முன்னேற்றத்தையும் எட்டிவிட முடியாது என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான எம்.சந்திரகுமார் தெரிவித்தார்.


2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான இரண்டாம் நிலை விவாதத்தில் நேற்று கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது,

எமது நாடு யுத்தத்தில் சிக்குண்டு கடந்த முப்பதாண்டுகளாக பெருமளவு வளங்களையும் மனித வலுவையும் இழந்துள்ளது. அதிலும் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் ஏற்பட்ட இழப்புகளும் அழிவுகளும் அதிகமாகும். இதை நாம் ஈடு செய்ய வேண்டும்.

இதை ஈடுசெய்யாத வரையில் அங்கே ஒரு நெருக்கடித் தன்மையே சமூக இயங்கு நிலையில் காணப்படும். அது நாட்டின் அபிவிருத்தியில் குறைவிருத்திப் பண்பையே அதிகரிக்கும்.

ஆகவே, சமனிலைத் தன்மையுடைய ஒரு நிலையை நாம் எட்ட வேண்டியுள்ளது. இதற்குக்



காரணமான இனமுரண் நிலையானது தொடர்ந்தும் நீடிப்பது பெருந்துயரத்துக்குரிய ஒரு விடயமாகும்.

எமது நாட்டினுடைய மூல வளங்களின் சிதைவுக்கும் அழிவுக்கும் எது காரணமாக இருந்ததோ, எமது மக்களின் வாழ்க்கை பின்தங்கிய நிலைக்கு எது காரணமாக அமைந்ததோ, அந்தக்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஆளுநர் மாநாடு கோலாகல ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

15 ஆவது ஆளுநர்களின் மாநாடு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் யாழ். ரில்கோ விடுதியில் கோலாகலமாக ஆரம்பமாகி நடைபெற்றுள்ளது.

14 ஆவது ஆளுநர்களின் மாநாட்டு தலைமைப் பொறுப்பினை ஏற்றிருந்த மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா 15 ஆவது ஆளுநர்களின் மாநாட்டின் தலைமைப் பொறுப்பை வைபவரீதியாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கையளித்ததைத் தொடர்ந்து அவர் தலைமையில் இந்த மாநாடு முதல் தடவையாக யாழ். நகரில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு ஊவா மாகாண ஆளுநர் சி.நந்தன மத்தியூ, வடமத்திய மாகாண ஆளுநர் திவாங்கனே, மத்திய மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகடுவ, கிழக்கு மாகாண ஆளுநர் றியர் அட்மிரல் மொகான் விஜியவிக்கிரம, தென்மாகாண ஆளுநர் குமாரி பாலசூரிய, வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ எஸ்.பலல்ல, சப்பிரகமுவ மாகாண ஆளுநர் டபிள்யூ.எம். லொக்குபண்டார, மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா மற்றும் ஏனைய மாகாணங்களின் ஆளுநர்கள், ஆளுநர்களின் செயலாளர்கள், பிரதம செயலாளர்கள் வருகைதந்திருந்தனர்.

முன்னதாக காலை 8.30 மணிக்கு 9 மாகாணங்களின் ஆளுநர்களும், ஆளுநர்களின் செயலாளர்கள், பிரதம செயலாளர்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழில் தாதியர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் தாதியர்களின் சுகயீன விடுமுறைப் போராட்டம் நேற்று நடைபெற்றது. யாழ். போதனா வைத்தியசாலை தாதியர்களும் போராட்டத்தில் ஈடுபட்டதால் தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த ஏனைய பிரிவுகள் ஸ்தம்பிதமடைந்தன.

ஒக்ரோபரில் வெளியிடப்பட்ட இலக்கம் 1779 வர்த்தமானியை செல்லுபடியற்றதாக்கல், தாதிச் சேவையின் மேலதிக நேரக் கொடுப்பனவைப் பெறல், அனைத்து தாதியர்களுக்கும் விபத்துக் கொடுப்பனவை வழங்கல், இன்வெண்ட்ரீ கொடுப்பனவை அதிகரித்தல், பழைய சட்டங்களுக்கு அமைய வகுப்புவாரி பதவியுயர்வுகளைப் பெறல், வாரத்தில் 5 நாள் வேலைநாளாக நடைமுறைப்படுத்தல், ஒக்ரோபர் 26 இல் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் எடுத்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து

19 ஆம் பக்கம் பார்க்க

### நாளைய தினமுரசில்....

வே. அர்ச்சுணன் எழுதும் "விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்" கட்டுரைத் தொடரின் 6ஆம் பகுதி.



# அதிக வருமானம் ஈட்டுகிறது
# இ.போ.ச. பருத்தித்துறை சாலை
## ஊழியருக்குச் சம்பளம் வழங்காதது ஏன்?

(திருநெல்வேலி)

பருத்தித்துறை இ.போ.ச. சாலை மாதத்தில் ஒரு கோடியே நாற்பது இலட்சம் ரூபாவை வருமானமாக ஈட்டுகின்றது. இதில் முப்பத்தாறு இலட்சம் ரூபாவை மட்டுமே ஊழியர்களுக்கு சம்பளமாக வழங்க வேண்டும். முப்பத்தாறு இலட்சத்தில் பதினான்கு இலட்சம் ரூபாவை இ.போ.ச.வின் தலைமைக் காரியாலயம் வழங்குகின்றது. மிகுதி இருபத்தினான்கு இலட்சம் ரூபாவையே வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களின் சம்பளத்துக்கு வழங்கவேண்டும். ஒரு கோடி நாற்பது இலட்சம் ரூபாவை எடுத்துக்கொண்டு ஊழியர்களின் சம்பளத்தை ஒழுங்காக வழங்குவதற்கு வடபிராந்திய போக்குவரத் துச் சபை பின்னடிக்கிறது எனத் தெரிவித்துள்ளார் பருத்தித் துறை சாலையின் ஈழமக்கள் ஜனநாயக ஊழியர் தொழிற்சங்க செயலாளர் வரதராஜா.

இன்று ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்காமை தொடர்பில் பருத்தித்துறை சாலை ஊழியர்கள் மேற்கொள்ளவுள்ள பணிப் பகிஷ்கரிப்புப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுபற்றி போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பிரதம முகாமையாளர் எஸ்.அன்வரிடம் கேட்டபோது எதிர்வரும் மார்கழி மாதத்திலிருந்து வடபிராந்திய இ.போ.ச.வின் அந்தந்த சாலைகளிடமே அவைகளின் வருமானத்தை விட்டு அதன் மூலம் அவைகளே ஊழியர்களின் சம்பளம் உட்பட்ட செலவுகளை அவைகளே செய்துகொள்ள தான் அனுமதி அளிக்க உள்ளதாகத் தெரிவித்தார். 25 ஆம் திகதிக்குள் ஊழியர்களுக்கான சம்பளம் முழுவதும் கொடுக்கப்பட்டு விடுவதாகவும், வட பிராந்தியத்தில் உள்ள இ.போ.ச.வின் ஏழு சாலைகளில் பருத்தித்துறை சாலையின் ஈழ மக்கள் ஜனநாயகத் தொழிற்சங்கம் மட்டுமே பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பருத்தித்துறைச் சாலையின ஸ்ரீலங்கா சுதந்திர தொழிற்சங்கம் இதில் கலந்துகொள்ளவில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (137)

# சுவாமி விவேகானந்தரின் எழுச்சி ஊர்வலமும் ஜெயந்தியும்



வலி. கிழக்குப் பிரதேசத்தில் இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜெயந்தி தினவிழாவும், எழுச்சி ஊர்வலமும் நடைபெறுவுள்ளது.

இவ்விழாவின் ஆரம்ப நிகழ்வாக, இந்தமாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை விவேகானந்தர் நினைவு தினவாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இவ் நினைவு வாரத்தின் இறுதிநாளான 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஏழாலைப் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து எழுச்சி ஊர்வலத்தினை நடத்தவுள்ளனர். இவ ஊர்வலம் ஏழாலை மகாவித்தியாலயத்திலிருந்து ஆரம்பித்து ஏழாலை சைவமகாஜனா வித்தியாலயத்தை வந்தடையவுள்ளது.

ஊர்வலத்தைத் தொடர்ந்து மேற்படி பாடசாலையில் ஜெயந்தி தினவிழா நடைபெறவுள்ளது. இதில் சுவாமி விவேகானந்தர் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன. (06)

# ஒளிவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வுகள் இன்று காலை 10.00 மணிக்கு கல்லூரியின் நாகேந்திரராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் கிறிஸ்தவ மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வில் பாடசாலை சமூகத்தினருடன் பாடசாலை பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். அத்துடன் மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (11)

# கவனயீர்ப்புப் போராட்டம்

கூடங்குளம் அணு உலை மின் நிலைய அபாயத்திற்கெதிரான மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம் யாழ். நகரில் இடம்பெறவுள்ளது. நாளை சனிக்கிழமை பகல் 11.00 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக இடம்பெறவுள்ள கவனயீர்ப்புப் போராட்டத்தைப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஏற்பாடு செய்துள்ளது. இதில் மக்கள் நலன்களில் அக்கறையுள்ள சமூக, பொது அமைப்புக்கள் கலந்துகொள்கின்றன.

# புதிய அதிபர் நியமனம்

(வடமராட்சி)

வடமராட்சி கரணவாய் மகா வித்தியாலயத்திற்குப் புதிய அதிபராக எஸ்.சண்முகநாதன் (தரம் II) நியமிக்கப்பட்டுள்ளார். இப்பாடசாலைக்குப் புதிய அதிபரை நியமிக்க வேண்டாம் எனவும் தற்போதைய பழைய அதிபரே இருக்கவேண்டும் என பழைய மாணவர்களும் அபிவிருத்திச் சங்கத்தினரும் வலியுறுத்தி வந்த நிலையில் இப்பாடசாலையில் முன்னர் கடமையாற்றிய அதிபர் கிருஸ்ணாகரனின் வேண்டுகோளுக்கிணங்க புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய அதிபர் நேற்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டதுடன் முன்னாள் அதிபரும் இணைந்து ஜனாதிபதியின் பதவியேற்பு தினத்தை முன்னிட்டு மரம் நாட்டிவைத்தனர்.

முன்னர் கடமையாற்றிய அதிபர் கிருஷ்ணாகரன் (தரம் III) மாணிக்கவாசகர் வித்தியாலயத்திற்கு அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார். (116)

# முகாமைத்துவப் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச கிராம அலுவலர் பிரிவுகளுக்கிடையில் நடத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டி முடிவுகள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் கிராம அலுவலர் பிரிவுகளில் கிராமசேவை உத்தியோகத்தர்களது செயற்பாடுகள் தொடர்பாக வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையிலேயே இத் தெரிவுகள் இடம்பெற்றது.

இதில் வரணி, இயற்றாளை மற்றும் நாவற்காடு கிராம அலுவலர் பிரிவுகளில் கடமையாற்றிய எஸ்.இராஜகுமாரன் முதலாமிடத்தையும், இடைக்குறிச்சிப் பிரிவில் கடமையாற்றிய கிராம அலுவலர் செல்வி என்.தீபா இரண்டாமிடத்தையும், கிராம அலுவலர் க.கலைவாணி 3 ஆம இடதையும் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச நிலைப்போட்டியில் முதலிடம் பெற்ற கிராம அலுவலர் மாவட்ட நிலைப் போட்டியில பங்குபற்றத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

# விஞ்ஞானபாடச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 - 11 வரை விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களிற்கான செயலமர்வு நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

சுற்றாடலில் உள்ள கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி, கற்றல் கற்பித்தல் துணைச் சாதனம் தயாரிப்பது தொடர்பாக இச் செயலமர்வு நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வு இன்றும் நாளையும் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ளது.

ஆசிரியர் பெயர் குறித்துக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது ஆசிரியர்கள் தவறாது செயலமர்வில் பங்குபற்ற ஆவன செய்யுமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் வரவு செலவுத் திட்டம் - 2013

2013 ஆம் ஆண்டிற்கு கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத் திட்டம் 2012 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 01 கிழமைக்கு மாநகர சபை அலுவலகம் 585/5 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். பிரதான பொது நூலகம் 15. முற்றவெளி வீதி, யாழ்ப்பாணம். ஆகிய இடங்களில் அலுவலக நேரத்தின் போது பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும் என மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் (252), (212) பி பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

திருமதி.யோ.பற்குணராஜா,
மாநகர முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(C/2151)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நீண்டகாலம் 21 வருடம் மீளக்குடியமராதிருந்த ஜே / 230 தந்தை செல்வாபுரம் கிராம மக்களை 10.05.2011 இல் மீளக் குடியமர்த்தியதோடு வீதிகள் அமைத்தமை, மின் கம்பங்கள் நாட்டியமை, கோழிக் குஞ்சுகள் வழங்கியமை, கூரைத்தகடுகள் வழங்கியமை, "வடக்கின் வசந்தம்" திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கியமை, வலி. வடக்கில் முதன் முறையாக இந்தியன் வீட்டுத்திட்டம் எமது பிரிவிற்கு வழங்கியமை ஆகிய எல்லாவற்றையும் செய்து தந்த கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் அவர்களிற்கும் எமது மக்களோடு நின்று அரும்பாடுபட்ட வலி. வடக்கு பிரதேச அமைப்பாளரான ஜெயபாலசிங்கம் (அன்பு) அவர்களுக்கும் முன்னைய பிரதேச செயலர் முரளிதரன், தற்போதைய பிரதேச செயலர் ஸ்ரீமோகன் அவர்களுக்கும் தந்தை செல்வாபுரம் மக்கள் சார்பிலும் கிராம அபிவிருத்திச் சங்கம் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்த்துவோர் ~ கிராம அபிவிருத்திச்சங்கம்
தெல்லிப்பழை, தந்தை செல்வாபுரம் ஜே/230

(R/159)

## மனமார வாழ்த்துகிறோம்

ஐம்பத்தி ஐந்தாவது அகவையில்
கால் பதிக்கும் உத்தமனே
மக்கள் சேவையே தங்களது
சேவை என கருதி அயராது
உழைப்பவரே - என்றும்
தங்களது பிறந்த நாளிலே
தாங்கள் மேன்மேலும் பற்பல
சேவைகள் செய்து - வளர
தங்களை மனமார
வாழ்த்துகின்றோம்



பணிப்பாளர்கள்,
அங்கத்தவர்கள்,
பணியாளர்கள்.

*மானிப்பாய் பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.*

(C/2150)

# யுத்தத்திற்குப் பின் வடமாகாணம் அபிவிருத்தியில் எழுச்சி கண்டுள்ளது

## வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி



(யாழ்ப்பாணம்)

இந்த நாட்டில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் நிறைவுக்கு வந்ததின் பின்னர் வடமாகாணம் முப்பது வருடங்களுக்கு முன்பு இருந்த நிலையை நோக்கி முன்னேற்றமடைந்து கொண்டிருப்பதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.மாநகரசபை மைதானத்தில் ஆரம்பமாகிய வடமாகாண மூன்று நாள் கண்காட்சி கூடத்தைத் திறந்து சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு வடமாகாண ஆளுநர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாணம் யுத்தத்திற்குப் பின்னர் அபிவிருத்தியில் எழுச்சி கண்டு வருகிறது.

புனர்நிர்மாண நடவடிக்கைகள் இங்கு நடைபெற்று வருகின்றன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினது வழிகாட்டலின் கீழும் வடமாகாணத்திற்கென அமைக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி செயலணியின் தலைவர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் நெறிப்படுத்தலின் கீழும் இந்த மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதன் மூலமாக 30 வருடங்களுக்கு முன்னர் வடக்கு மாகாணம் எவ்வாறு இருந்ததோ அதற்கு ஒரு படி மேலே வட மாகாணத்தை உயர்த்திட வேண்டும் என்பதே அவர்களது அவாவாகவுள்ளது. வடமாகாணத்தை கிராம மட்டத்திலும், உள்ளூராட்சி மட்டத்திலும், நகர மட்டத்திலும், நவீனமடைய வைப்பதோடு இதற்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தின் கீழ் மட்டத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகள், மாகாண சபை, கூட்டுறவுத் துறை ஆகியவற்றை மேல் மட்டத்திற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கையை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் வடமாகாணத்தில் வாழுகின்ற சாதாரண பொது மக்களுக்குத் தேவையான வாழ்வாதாரத் தேவைகளுக்கான கடன் வசதிகளைக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு வழங்கியிருக்கின்றோம். இப்படியான கடன் வசதி மூலமாக உள்ளூராட்சி சபைகளின் அனுசரணையுடன் சங்கங்கள் ஊடாக தங்களது வாழ்வாதாரத்தை அவர்கள் வளர்த்துக் கொண்டிருக்கின்றனர். தற்போது உள்ளூராட்சி சபைகளும், கிராம அபிவிருத்திச் சங்கங்களும் ஏனைய துறையினரும் தங்களால் இயன்ற உதவியை மக்களுக்கு வழங்கி வருகின்றனர். 2010 ஆம் ஆண்டு குறுகிய இடம் ஒன்றில் இந்தக் கண்காட்சி நடைபெற்றது. அதில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் இடம்பெறவில்லை. ஆனால் இந்தக் கண்காட்சியில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், விற்பனையும் நடைபெறுகின்றது. இன்னமும் குறுகிய காலத்தில் பாரிய முன்னேற்றத்தைக் காண முடியும். அத்துடன் 2010 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விவசாயக் கண்காட்சியினை விட ஒருபடி மேலாக இந்தக் கண்காட்சி நிகழ்வதாகவும் வடமாகாண ஆளுநர் தெரிவித்தார். (பா)



ஜனாதிபதியின் 2 வது வருட பதவியேற்பு தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்.ஒஸ்மானியக் கல்லூரியில் நடைபெற்ற மரம் நடும் நிகழ்வில் ஜே.86, ஜே.87 கிராம அலுவலர் எம்.எஸ்.ஜினூஸ் மரம் நடுவதையும், அருகில் யாழ்.பிரதேச செயலக அதிகாரிகள், கல்லூரி அதிபர், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நிற்பதையும் காணலாம். (105)

# சிவ வேள்விப் பெருவிழா

(வவுனியா)

உலக அமைதி வேண்டியும் தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு வேண்டியும் 66 பன்னிரு திருமுறை திருப்புகழ் முற்றோதலும் சிவமூல மந்திரம் உச்சரித்தலும் நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதியில் இருந்து 28 ஆம் திகதி வரை வவுனியா ஆறுமுக நாவலர் திருமுறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சைவ சமய பாதுகாப்புப் பேரவை ஒழுங்கு செய்துள்ள இச் சிவ வேள்விப் பெருவிழாவில் இரவு பகலாக இடைவிடாது வேத புராணங்கள் ஓதப்பட்டு 28 ஆம் திகதி அகண்ட நாம கூட்டுப்பிரார்த்தனையுடனும் திருமுறைப் போற்றி அர்ச்சனையுடனும் நிறைவு பெறவுள்ளது.

இப்பிரார்த்தனைகள் சைவக் குருக்கள் தற்புருஷ தேசிக க. சிவராசாக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளதால் சமய தீட்சை பெற்று மாமிச போசனம் அற்றவர்கள் கலந்து கொண்டு திருமுறைகள் ஓதலாம் எனவும் சைவ சமய பாதுகாப்புப் பேரவை தெரிவித்துள்ளது. (160)

# பல.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி - நெல்லியடி பல.நோ.கூ.சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கத்தின் தலைவர் செ.செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சங்கத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராயும் பொருட்டு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கலந்து கொண்டார்.

இக்கூட்ட ஆரம்பத்தின் போதே ஒரு சில உறுப்பினர்கள் கூட்டத்தை நிகழ்ச்சி நிரலின்படி தொடர விடாமல் கூட்டத்தைக் குழப்பும் முயற்சியில் ஈடுபட்டமையால் பொதுச்சபை உறுப்பினரின் பாதுகாப்புக் கருதி ஆணையாளரால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக சங்க பொது முகாமையாளர் நேசராசா தெரிவித்துள்ளார்.

மேலும் இக்கூட்டத்தில் பொது மக்களோ அல்லது உறுப்பினர்களோ விலை ஏற்றம் பற்றி எதுவித புகாரும் இச் சங்கத்திற்குத் தெரிவிக்கவில்லை. அத்துடன் எமது சங்கம் அயற் சங்கங்கள், தனியார் கடைகள் என்பவற்றை விட பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கி வருவதுடன் சங்கம் வளர்ச்சி கண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வு என்னும் தலைப்பில் 06.11.2012 தினமுரசு பதிப்பில் வெளியான செய்தியில் கூட்டம் ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது எனவும், சங்கம் பொருட்களை ஏனைய கடைகளை விட உயர்ந்த விலைக்கு விற்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதிக்கு ஆசிவேண்டி வவுனியாவில் வழிபாடுகள்

(வவுனியா)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 2 ஆவது பதவிப் பிரமாணத்தின் மூன்றாம் வருட பூர்த்தியை முன்னிட்டு வவுனியா மாவட்டத்தில் உள்ள சகல மத வழிபாட்டுத் தலங்களிலும் விசேட வழிபாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திரவின் பணிப்பின் பேரில் மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களும் மேற்படி சர்வமத வழிபாடுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

பௌத்த மத வழிபாடுகள் மடுக்கந்த தலதா விகாரையில் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருவதுடன் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது.

மாவட்டத்தில் உள்ள இந்து ஆலய வழிபாடுகள் இன்று வெள்ளிக்கிழமை பிறபகல் 4.15 மணிக்கும் முஸ்லிம் மத வழிபாடுகள் அன்றைய தினம் 1 மணிக்கும் கத்தோலிக்க மத வழிபாடுகள் எதிர்வரும் 18 அம் திகதி காலை 7.30 மணிக்கும் இடம்பெறவுள்ளன. (160)


# மின்சாரசபைக் கட்டடம் 1 கோடியில் நிர்மாணம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மின்சார சபைக் கட்டடம், ஹாட்லிக் கல்லூரி வீதியில் உள்ள நகரசபைக்குச் சொந்தமான 6 பரப்புக்காணியில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இக்கட்டடம் மாடிக்கட்டடமாக நிர்மாணிக்கப்படவுள்ளதுடன் இக்கட்டடம் அமைப்பதெற்கென 1 கோடி 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இக்கட்டட வேலைகள் 6 மாத காலத்துக்குள் முடிக்கப்படும் என மின்சாரசபை பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (109)





மாதகல் மேற்கு ஜே.152 கிராம அலுவலர் பிரிவில் மீள் குடியமர்ந்த மக்களுக்கு கூரைத் தகடுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்ற போது, வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் வலி. மேற்கு பிரதேச சபை அமைப்பாளருமான ஜீவன் மக்களுக்கு கூரைத்தகடுகளை வழங்கி கலந்துரையாடுவதைக் காணலாம்.

**கடுமையான கஞ்சத்தனம், தகுதியற்ற தற்பெருமை, எல்லையற்ற பேராசை ஆகிய மூன்றும் மனிதனை வீணாக்கிவிடும்.**

*- முகம்மது நபி.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## சும்மா இருக்கும் திறமரிது காண்!

முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்திவிடும் என்கிறார் வள்ளுவர். முயற்சி இல்லாமல் எதையும் பெற்றுவிட முடியாது என்பது தெளிவு. நமக்கோ குறைகள் இருக்கின்றன; தேவைகள் இருக்கின்றன; வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகள் சரிவரக் கிடைக்காமல் இன்னும் அவலப்படுவோர் இருக்கிறார்கள்; அதிகாரங்கள் பகிரப்பட்ட ஒரு தீர்வின் தேவை இருக்கிறது. இப்படிப் பல தேவைகளோடுதான் நமது மக்கள் காத்திருந்தபடி உள்ளார்கள்.

தமிழ் மக்களின் தலைவர்களென்றும் ஏக பிரதிநிதிகள் என்றும் சொல்லிக் கொள்வோர் என்ன செய்கிறார்கள்? மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, அவலங்களோடுள்ள அவர்களது நிலைமையை மாற்ற என்ன முயற்சியைச் செய்கிறார்கள்? சிங்கள அரசாங்கம் எதையும் தராது என்பதைச் சொல்லி மக்களுக்கு விதவிதமாக வெறுப்பேற்றுவதையே ஒரே முயற்சியாகத் தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

இதுதானா மக்களின் அவலத்தைப் போக்கும் முயற்சி? இந்த நாட்டுக்குள் செய்ய எதுவுமில்லை; இந்தியாவோ அமெரிக்காவோ வெகுண்டெழும் வரை கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு காத்திருங்கள் என்று சொல்லிவிட்டு அடுத்த வீராவேச அறிக்கை தயாரிப்பதுதானா இவர்கள் செய்யும் முயற்சி? இந்தியாவும் அமெரிக்காவும் எதை எடுத்துத் தரும், எப்போது எடுத்துத் தரும், எப்படி எடுத்துத் தரும் என்ற விளக்கங்களையாவது எப்போதாவது சொல்லியிருக்கிறார்களா?

ஐ.நா.வோ சர்வதேசமோ அண்ட சராசரமோ வந்து என்ன தீர்வை எடுத்துத் தரவேண்டும் என்றாவது இவர்கள் கேட்டிருக்கிறார்களா? வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையைக் கொடுத்த போதும் இவர்கள் எடுக்கவில்லை. பின்னர் சந்திரிகா சமஷ்டிக்கு அண்மித்த தீர்வைக் கொடுத்த போதும் எடுக்கவில்லை. இந்த அரசுடன் பேச்சையும் தொடர முடியாது என்று முறித்துக் கொண்டார்கள். சரி, அனைத்துக் கட்சிகளும் அடங்கிய தெரிவுக் குழுவிலாவது போய்ப் பேசுங்களேன் என்றால், "அங்கும் என்னத்தைப் பேசி.... என்னத்தைத் தீர்வெடுத்து...." என்று இழுத்து விட்டுப் பம்முகிறார்கள்.

போகட்டும், இந்த முயற்சிகள் ஒன்றும் உங்களுக்குச் சரிவரவில்லையென்றால், தமிழ் மக்களும் அண்ணாந்து சர்வதேச விமானங்கள் வருகின்றனவா என்று பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதுதானா? இதைச் சொல்லத்தானா தலைவர்கள்? நீங்கள் செய்யக் கூடியதாக வேறு முயற்சிகளே இல்லையா?

அரசோடு கோவித்துக்கொண்டு உங்களுக்குத் தெரிவுக்குழுவுக்குப் போக முடியாவிட்டால், மக்கள் அப்படியே அவலத்தில் இருக்க வேண்டியதுதானா? அரசுடன்தான் பிரச்சினை என்றால், ஏனைய கட்சிகளுடன் பேசி நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெறுவதற்கு முயற்சி செய்து பார்க்கலாமல்லவா. ஐ.தே.க. உங்களது நெடுநாளைய நண்பன்தானே. அரசாங்கக் கட்சிக்குள்ளும் தீர்வுக்கு ஆதரவானவர்கள் இருக்கிறார்கள். இடதுசாரிகள் இருக்கிறார்கள். முஸ்லிம் காங்கிரஸ், மலையகக் கட்சிகள் என்று தீர்வுக்கு ஆதரவான சக்திகளை ஒருங்குதிரட்ட என்ன முயற்சிகளைச் செய்தீர்கள்?

எவரும் சரிவர மாட்டார்கள் என்பதுதான் உங்கள் பதிலா? சர்வதேசத்தை சந்திரனாகக் காட்டி, நிலா நிலா வா வா என்று மக்களை ஏமாற்றிப் பாடிக்கொண்டிருப்பது தேர்தல் வாக்குகளுக்காக மட்டும்தானே. இந்த நாட்டில் எந்தத் தீர்வு வருவதாக இருந்தாலும் அது சிங்கள மக்களின் ஆதரவோடும்தான் வந்தாக முடியும் என்ற யதார்த்தத்தைப் பலரும் சுட்டிக் காட்டுகிறார்களே! குறைந்த பட்சம் அந்த மக்களிடமாவது போய் இந்த நாட்டின் சமாதான சக வாழ்வுக்குத் தேவையானதை விளக்க முயற்சியைச் செய்யலாமே!

- ஆசிரியர்

# எதிர்கால சந்ததியை பாதுகாக்க இயற்கை வளத்தை அழியாதீர்

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

இயற்கையைப் பாதுகாக்கத் தவறின் அது எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் இழைக்கும் துரோகமாகுமென கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்திலுள்ள சின்ன பல்லவராயன் கிராமத்தில் மரம் நாட்டும் நிகழ் வில் நேற்றுக்காலை 09.39 மணிக்கு இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து சம்பிரதாய பூர்வமாக மரக்கன்றினை நாட்டி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இயற்கையோடு மனிதன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் அது எமது வாழ்வுக்கு நன்மையையும் ஆரோக்கியத்தையும் தரும் இயற்கையைப் பகைத்துக் கொள்வதன் ஊடாக மனித குலம் பெரும் பாதிப்புக்களையும் அழிவுகளையும் சந்தித்துவருகிறது அத்தோடு தற்போதைய சமூகமாகிய நாம் இயற்கையினை அழிப்பதன் மூலம் நாம் எமக்கும், எமது வருங்கால சந்ததியினருக்கும் அழிவுகளையே வெகுமதியாக வழங்குகின்றோம் எனவேதான் வளமான இயற்கையினை உருவாக்குதன் ஊடாக வளமான வாழ்க்கையினைப் பெற்றுக் கொள்ள முடியும் கடந்த காலங்களில் காடுகளை அழித்ததன் விளைவாக இன்று எமது பிரதேசங்களிலேயே நாம் அதன் விளைவுகளை அனுபவிக்கத் தொடங்கியுள்ளோம். சீரற்ற கால நிலை, தன்விளைவால் வறட்சி போன்ற பாதகமான மாற்றங்கள் எம் கண்முன்னே நிகழ்ந்துகொண்டிருக்கிறது எனவே இயற்கையினைப் பாதுகாக்கும் மிகப்பெரிய பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு எனவும் தெரிவித்தார்

பசுமையான நாடு வளமான தேசம் என்ற தொனிப்பொருளின் கீழ் நேற்றைய தினம் தேசிய ரீதியில் பதினொரு நிமிடங்களில் பதினொரு இலட்சம் மரக்கன்றுகள் நடும் நிகழ்வின் மாவட்ட நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் ஸ்ரீனிவாசன், மாவட்டச் செயலக உதவித்திட்டப்பணிப்பாளர் கேதீஸ்வரன், பூநகரி பிரதேச செயலர் வசந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் மக்கள் தொடர்பு அதிகாரி தவநாதன், பிரதேச இராணுவ கட்டளை அதிகாரி லெப். கேணல் குனதுங்க, கமநலசேவை உதவி ஆணையாளர் தயாரூபன். நீர்ப்பாசனத் திணைகளப் பொறியியலாளர் விகிர்தன், மற்றும் கிராம அலுவலர் மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (29)

# சிறைச்சாலை நெருக்கடியை குறைப்பதற்கு மாற்றுத்திட்டம்

(கொழும்பு)

சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு தண்டனைகளை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் ஆராயவுள்ளது.

சிறைச்சாலைகளில் நிலவும் நெருக்கடியைக் குறைக்கும் ஒரு நடவடிக்கையாகவே வேறு தண்டனைகள் குறித்து ஆராயவிருப்பதாக முன்னாள் சட்டமா அதிபரும் அமைச்சரவையின் சட்ட ஆலோசகருமான மொஹான் பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தடுத்து வைத்தல் அல்லாத வினைத்திறன் மிக்க பல்வகையான தண்டனைகள் இருக்கின்றன அவ்வாறானவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து ஆராயவிருக்கின்றோம். ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் இந்த விடயத்தில் கவனம் செலுத்திவருகின்றார்.

விளக்கமறியல் அல்லாத தண்டனை என்பது மறியல் அல்லாமல் வேறு எங்காவது அனுபவிக்க வேண்டிய குற்றவியல் தண்டனையாகும் நன்னடத்தை என்பதும் இந்த வகையைச் சார்ந்ததாகும் என்றார்.

இதேவேளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வெலிக்கடை சிறைச்சாலை கலகம் பற்றி விசாரிக்கப் போவதாகக் கூறியுள்ளது .

அதுமட்டுமன்றி கையடக்கத் தொலைபேசிகளை அகற்றுவதற்கு விசேட அதிரடிப்படையை அனுப்ப வேண்டுமா? தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் யார்? அக்குழுவின் தலைவர் ஜனாதிபதியாவார் அவரினால் கையடக்க தொலைபேசிகளை இலகுவாக செயலிழக்கச் செய்திருக்க முடியும் என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

சிறையுடைப்பை நிறுத்துவதற்கு வன்முறையில்லாத முறைகளைப் பற்றி அரசாங்கம் சிந்திக்கவே இல்லை. சிறையிலிருந்து தப்பியோடியவர்களை நீங்கள் கொல்ல முடியாது.

அவர்களுக்கான தண்டனையைக் கூட்டியிருக்கலாம் ஆனால் நீங்கள் அவர்களின் உயிரை எடுக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையிலேயே முன்னாள் சட்டமா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# ஆபாச இணையத்தளங்களைத் தடைசெய்வதற்குத் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கைப் பெண்கள் மற்றும் சிறுவர்களின் ஆபாசப் புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் அடங்கிய இணையத்தளங்களைத் தடைசெய்வதற்கு சட்ட மா அதிபர் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பிலான ஆய்வினை சட்ட மா அதிபர் திணைக்களம் மேற்கொண்டு வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஆபாச இணையத்தளங்கள் தொடர்பில் பத்தரமுல்ல சிறுவர் நீதிமன்றத்திற்கு அறிவித்ததை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், 51 ஆபாச இணையத்தளங்கள் தொடர்பிலான தகவல்களை பத்தரமுல்ல சிறுவர் நீதிமன்றத்தில் முன்வைத்ததாக அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இதேவேளை, 18 வயதிற்குக் குறைவான யுவதிகளை பாலியல் நடவடிக்கைகளில் உட்படுத்துவதற்கு இடமளிக்கின்ற மற்றும் வாடகைக்கு அறைகளை வழ்ங்கும் ஹோட்டல் உரிமையாளர்களைக் கைது செய்வதற்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் மா அதிபரின் விசேட சுற்றுநிருபம் ஒன்றிற்கு அமைவாக இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

# வாகனங்களின் விலைகள் அதிகரிப்பு


(கொழும்பு)

2013ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தில் சுங்கத்தீர்வை அதிகரிக்கப்பட்டதால், சகல வகையான வாகனங்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத்சந்திர தெரிவித்தார்.

இதன் பிரகாரம் வாகனங்களின் விலை 2 இலட்சம் ரூபாவிலிருந்து 5 இலட்சம் ரூபாவுக்கு இடையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. சிறியரக காரான மாருதியின் விலை 2 இலட்சம் ரூபாவினாலும் டொயோட்டா விட்ஸ்ன் விலை 2 இல்ட்சம் ரூபாவிலிருந்து இரண்டரை இலட்சம் ரூபா வரை அதிகரித்துள்ளது.

இதேவேளை, வான் மற்றும் லொறி ஆகியவற்றின் விலைகள் 4 இலட்சம் ரூபாவினாலும் 5 தொன் எடையுடைய வாகனங்களின் விலைகள் 4 இலட்சம் ரூபா முதல் 5 இலட்சம் ரூபாவினாலும் அதிகரித்துள்ளன.





# தொடரும் ஒரு தமிழ் பலவீனம் குறித்து...

**இறுதிக்கட்டத்தில் பல்லாயிரக்கணக் கானவர்கள் கொல்லப்பட்டதற்கு விடுதலைப்புலிகள்தான் காரணமா என்று கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, ஆம் என்பது போல் பதிலளித்திருக்கும் சொல்ஹேய்ம், போரின் இறுதி முடிவு என்னவாக இருக்கப்போகிறது என்பதை அனைவரும் உணர்ந்திருந்த நிலையிலும், போரை ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் முடிக்காமல் கடைசிவரை போராட வேண்டுமென்று பிரபாகரன் உள்ளிட்ட விடுதலைப்புலிகளின் தலைமை முடிவெடுத்தது ஒரு வரலாற்றுத் தவறாகும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.**

**யதீந்திரா கட்டுரையிலிருந்து**

சில வாரங்களுக்கு முன்னர், இலங்கையின் சமாதான ஏற்பாட்டாளரும் நோர்வேயின் முன்னாள் அமைச்சருமான எரிக் சொல்ஹேய்ம், யுத்தத்தின் தீர்மானகரமான இறுதிக் கட்டத்தில் தாம் மேற்கொண்ட முயற்சியொன்று குறித்து பகிரங்கமாக பேசியிருந்தார். பி.பி.சியின் தமிழ் மற்றும் சிங்கள சேவைகளுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றின் போதே அவர் இந்த தகவல்களை தெரிவித்திருந்தார். விடுதலைப்புலிகள் அமைப்பு நிர்மூலமாகப்பட்ட பின்புலத்தில் ஆங்காங்கே கசிந்த சில தகவல்கள் இப்போது சந்தேகத்திற்கிடமற்ற வகையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. சொல்ஹெய்ம் அப்படியென்ன புதிய தகவல்களை வெளிப்படுத்தியிருக்கின்றார்?

- இலங்கையின் சமாதான முயற்சியில் முக்கிய பங்கு வகித்த நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து 2009 ஜனவரி மாதம் ஒரு ஆலோசனையை முன்வைத்திருந்தன. ஐக்கிய நாடுகள் சபையும் இதன் பின்னணியில் இருந்தது. அன்றைய சூழலில் போரின் முடிவு இராணுவரீதியாக இலங்கை அரசுக்கு சாதகமாக இருக்கும் என்பதைப் பலரும் அறிந்திருந்த நிலையிலேயே மேற்படி நாடுகள் இத்தகையதொரு திட்டத்தை முன்வைத்திருந்தன. இதனடிப்படையில், சர்வதேச அமைப்பு அதாவது அமெரிக்கா, இந்தியா அல்லது வேறு ஒருநாடு இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிக்கு ஒரு கப்பலை அனுப்பிவைப்பதென்றும், அதன் மூலம் போரில் எஞ்சியிருந்த பொது மக்கள் மற்றும் விடு தலைப் புலிகள் அனைவரையும் புகைப்படத்துடன்பதிவுசெய்து, கொழும்புக்கு கொண்டு சென்று பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் தவிர்ந்த அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டதாககுறிப்பிட்டிருக்கும் சொல் ஹேய்ம், இது தொடர்பாக இறுதி முடிவெடுப்பதற்காக அப்போது விடுதலைப்புலிகளின் சர்வதேச செயலாளராக இருந்த (கே.பி) குமரன் பத்மநாதனை பாதுகாப்பாக ஒஸ்லோவிற்கு அழைத்து வருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இறுதி நேரத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மேற்படி திட்டத்தை நிராகரித்து விட்டதால் எங்களால் எதனையும் மேற்கொண்டு செய்ய முடியாமல் போய் விட்டது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் இறுதிக் கட்டத்தில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள், இன்று நம்மத்தியில் உயிருடன் இருந்திருப்பர் -

இதுதான் சமீபத்தில் சொல்ஹெய்ம் தெரிவித்திருக்கும் கருத்துக்கள்.

அப்படியாயின் இறுதிக்கட்டத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதற்கு விடுதலைப்புலிகள்தான் காரணமா என்று கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, ஆம் என்பது போல் பதிலளித்திருக்கும் சொல்ஹேய்ம் போரின் இறுதி முடிவு என்னவாக இருக்கப்போகிறது என்பதை அனைவரும் உணர்ந்திருந்த நிலையிலும், போரை ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் முடிக்காமல் கடைசிவரை போராட வேண்டுமென்று பிரபாகரன் உள்ளிட்ட விடுதலைப்புலிகளின் தலைமை முடிவெடுத்தது ஒரு வரலாற்று தவறாகும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். விடுதலைப்புலிகள் அமைப்பு மக்களைப் பாதுகாப்பாக வெளியேற அனுமதித்திருந்தால், அதிகமான உயிரிழப்புக்களைத் தடுத்திருக்க முடியும் என்பது ஏலவே சிலரால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. 2007 தொடக்கம் 2009 வரையான காலப் பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் செய்தி தொடர்பாளராகவிருந்த கார்டன் வைஸ் வெளியிட்டிருக்கும் (The Cage) நூலிலும் இத்தகைய தொரு கருத்தைக் காணலாம். ஐ.நா நிபுணர் குழு அறிக்கையிலும் விடுதலைப்புலிகள் மக்களை மனித கேடயமாக பயன்படுத்தினர் என்னும் குற்றச்சாட்டு மிகவும் தெளிவாக முன்வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு சர்வதேச அளவில் விடுதலைப்புலிகள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்ற ஒரு சூழலில்தான் சொல்ஹெய்மின் மேற்படி கருத்துக்கள் வெளிவந்திருக்கிறன. ஆனால் முன்னர் தமிழ் சூழலில்,சர்வதேச விவகாரங்கள் தொடர்பில் எவ்வாறான தொருமந்தமான பார்வை இருந்ததோ, அத்தகையதொரு பார்வைதான் இப்போது சொல்ஹெய்மின் கருத்துக்களை அடியொன்றியும் வெளிவருகின்றது.

சொல்ஹெய்மின் கருத்துக்கள் வெளிவந்ததைத் தொடர்ந்து, அது வரை கனவுலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த சிலர், சொல்ஹேய்மை திட்டித் தீர்க்கத் தொடங்கிவிட்டனர். சொல்ஹெய்ம் எவ்வாறு இப்படிச் சொல்லலாம் என்பதே அவர்களது தடுமாற்றத்தின் அடிப்படையாக இருக்கிறது. சர்வதேசத்தை விளங்கிக்கொள்வதில் முன்னர் எத்தகையெதொரு பலவீனம் காணப்பட்டதோ, அதில் சிறிதும் முன்னேற்றமில்லாத ஒரு பார்வையே மீண்டும் வெளிப்பட்டிருக்கிறது.

உண்மையில் இன்று சொல்ஹெய்ம் குறிப்பிட்டிருக்கும் தகவல்கள் அனைத்தும், ஏலவே விடுதலைப் புலிகளின் சர்வதேச செயலராக இறுதிக்கட்டத்தில் பொறுப்பேற்றுக் கொண்ட (கே.பி)குமரன் பத்மநாதனால் வெளியிடப்பட்ட தகவல்களாகும். பத்மநாதன், ஆங்கில பத்திரிகையாளர் டி.பி..எஸ்.ஜெயராஜுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றின் போதே இதனைக் குறிப்பிட்டிருந்தார். கே.பி இத்திட்டத்தை விரிவாக குறிப்பிடாது விட்டிருந்தாலும், இது தொடர்பில் 16பக்க ஆவணமொன்றை பிரபாகரனுக்கு அனுப்பி அனுமதி கோரியதாகவும், ஆனால் பிரபாகரனோ தனது 16பக்க ஆவணத்திற்கு வெறும் மூன்று சொற்களில் “இதை ஏற்றுக்கொள்ள முடியாது” என்று பதிலளித்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.கே.பி.அரசின் கைதியாக இருந்துகொண்டு தெரிவித்த கருத்துக்களை இலகுவாக புறம்தள்ளியவர்களுக்கு, அதனையே இப்போது, 10வருடங்களாக இலங்கையின் சமாதான ஏற்பாட்டாளர்களாக செயலாற்றியிருந்த எரிக் சொல்ஹேய்ம் குறிப்பிடும்போது சகித்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது.

எரிக் சொல்ஹேய்ம் இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளுக்கான ஒரு ஏற்பாட்டாளர் என்னும் வகையில் அவர் மேற்குலக நலன்களை அச்சொட்டாகப் பாதுகாக்க முயலும் ஒரு இராஜதந்திரி. இதற்கு மேல், சொல்ஹேய்ம் பிரபாகரன் புகழ்பாட வேண்டுமென்பதெல்லாம் சில தமிழர்களின் அறியாமையே தவிர, அது அவரது பிரச்சினையல்ல. சொல்ஹெய்மைப் பொறுத்தவரையில் இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்கான பங்களிப்பு என்பது அவருக்கு வழங்கப்பட்ட ஒரு (Assignment) பணி அவ்வளவுதான். இது மேற்குலக ஆசியுடன் மேற்கொள்ளப்பட்ட (Oslo Assignment) ஒஸ்லோ பணி. இந்த பணியில் அவர் தோற்கவுமில்லை வெல்லவுமில்லை. ஒப்பீட்டளவில் விடுதலைப்புலிகள் மீது சொல் ஹேய்முக்கு அனுதாபமிருந்திருக்கலாம். அதற்கு சொல்ஹெய்முக்கும் விடுதலைப்புலிகளின் தத்துவ ஆசிரியராக அறியப்பட்ட அன்ரன் பாலசிங்கத்திற்கும் இடையில் நிலவிய நட்பும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். சமாதான முன்னெடுப்புக்களில் நோர்வேயின் வகிபாகம் தொடர்பான (Pawns of peace) மதிப்பீட்டறிக்கை ஒஸ்லோவில் வெளியிடப்பட்ட போது, அங்கு சொல்ஹெய்ம் தெரிவித்திருந்த ஒரு விடயம் எனது ஊகத்திற்கு வலுச் சேர்க்கின்றது:

- பிரபாகரனுக்கு ஜனநாயக அணுகுமுறைகள் விளங்காது, அவரால் சர்வதேசத்தை விளங்கிக்கொள்ள முடியாது. அவர் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு யுத்தப் பிரபு. அவர் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த சீன யுத்தப் பிரபுக்கள் போன்றவர், தயவு செய்து அவரை விளங்கிக் கொள்ளுங்கள் -

இப்படி பாலசிங்கம் தன்னிடம் பகிடியாகச் சொல்வதாக சொல்ஹெய்ம் அப்போது குறிப்பிட்டிருந்தார். இந்தப் பின்னணியில் பார்த்தால், பாலசிங்கத்துடனான நட்பின் ஊடாக பிரபாகரன் மீது சொல்ஹெய்முக்கு அனுதாபம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அந்த அனுதாபம் என்பது, பிரபாகரன் ஜனநாயக வழிக்கு வரவிரும்பின், அதற்கானதொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்னும் அளவிலானது மட்டுமே ஆகும்.

சொல்ஹெய்மைப் பொறுத்தவரையில், சர்வாதிகாரிகள் ஆபத்தான மனிதர்கள் மேலும் பின்லேடன் போன்றவர்களுடன் கூட பேச வேண்டும், அவ்வாறானவர்களுக்கும் கூட நாம் ஒரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டுமென்னும் கருத்தைக் கொண்டிருப்பவர். விடுதலைப்புலிகளின் தலைமை ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்ட நிலையில், 2009 யூன் மாதம் அவர் பி.பி.சியிற்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில், மேற்படி கருத்தைப் பதிவு செய்திருந்தார். உலகத்தால் மிகவும் ஆபத்தான பயங்கரவாதி என்று வர்ணிக்கப்பட்ட, குறிப்பாக மனிதர்களை வெடிகுண்டாக பயன்படுத்தி சாதாரண மக்களின் கொலைகளுக்கு காரணமாகவிருந்த பிரபாகரனுடன் பேச வேண்டுமென்று நீங்கள் எவ்வாறு முடிவு செய்தீர்கள் - என்னும் கேள்விக்கு பதிலளிக்கும் போதே, சொல்ஹேய்ம் இந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தார். இன்று சொல்ஹேய்ம் போன்ற சமாதான ஏற்பாட்டாளர்கள் கூட பிரபாகரனின் தவறுகளை பகிரங்கமாக சுட்டிக் காட்டியிருப்பதில் இருந்து, தமிழர் தரப்பு எதனை விளங்கிக் கொள்ளப்போகிறது என்பதுதான் கேள்வி.

இன்று தமிழர்களுக்கு ஒரு நியாயமான தீர்வு அவசியம் என்பதில் கரிசனை கொள்ளும் தமிழ் தலைமைகள், உண்மையிலேயே அவர்களுக்கு தமிழ் மக்களது நலனில் அக்கறையிருப்பின், அவர்கள் ஒரு விடயத்தை விளங்கிக் கொள்ள வேண்டும் - பிரபாகரனும் அவரால் வழிநடத்தப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் உலகளவில் எந்தவிதமான அனுதாபமோ மரியாதையோ இல்லை என்பதுதான் அந்த விடயம். இது பிரபாகரனை கடவுள் ஸ்தானத்துக்கு உயர்த்திப் பார்ப்போருக்கு கடினமானதாக இருக்கலாம், ஆனால் இதுதான் இன்றைய யதார்த்தம். இன்றைய சூழலில் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி சிந்திக்கும் அனைவரும் தம்மை ஒரு (De-Tiger politics) புலிநீக்க அரசியலுக்கு உட்படுத்திக் கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.

# பிரதம நீதியரசருக்கு எதிரான பிரேரணையை இடை நிறுத்துக

## அரசைக் கோருகிறது ஐ.நா

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டு வந்துள்ள குற்றவியல் பிரேரணையை இடைநிறுத்து மாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான விசேட நிபுணர் கப்ரியேல் க்னாவுல் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் நீதித் துறையைப் பாதுகாக்க முன்வர வேண்டும். இதற்காக உடனடி யான நடவடிக்கைகளை அர சாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

உடல் மற்றும் உளரீதியாக நீதித்துறையைச் சேர்ந்தவர்கள் மீது அரசாங்கம் மேற்கொள்கின்ற தாக்குதல்கள் உடனடியாக தவிர்க் கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டு வந்துள்ள குற்றவியல் பிரேரணை தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நீதித்துறையிலிருந்து உயர் நீதியரசர் நீக்கப்படுவதே, நீதித் துறை மீது அரசாங்கம் மேற் கொள்கின்ற அதிகபட்ச வன் முறையாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



மாத்தறை மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் தமிழ் மக்கள், தமது வாழ்விடங்களைத் திருத்தும் வகையில் அவர்களுக்கு சீமெந்துப் பைக்கற்றுக்களை நாடாளுமன்ற உறுப் பினர் புத்திக பத்திரண வழங்குவதனைக் காணலாம்.

# தமிழர்களைக் கடத்திய பாகிஸ்தானியர் கைது

(பாரிஸ்)

பிரான்ஸ் பரிஸ் நகரில் இருந்து தெற்கு நோக்கிச் சென்ற இரு தமிழர்களை கடந்த வெள்ளிக்கிழமை கடத்திச் சென்ற தாக நான்கு பாகிஸ்தான் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப் பாகிஸ்தானியரைக் கைது செய்த பொலிஸார் அவர்களை லியோன் சிறைச்சாலையில் அடைத்துள்ளனர்.

அவர்களுக்காக கடந்த செவ்வாய்க்கிழமை சட்டத்தரணிகள் விடுத்த பிணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது. 32 வயது, 25 வயது கொண்ட இரு தமிழர்களையே மேற்படி பாகிஸ்தானியர் கடத்தியுள்ளனர்.

ஆட்கடத்தல், கொலை, கொள்ளை மற்றும் ஆயுதப் பயன்பாடு கள் போன்ற குற்றச்சாட்டுக்கள் மேற்படி நான்கு பாகிஸ்தானியர்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் ஏன் இத்தமிழர்களைக் கடத்தினர் என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# சட்டவிரோத பொருட்கள் வெலிக்கடையிலிருந்து மீட்பு

(கொழும்பு)

கலவரத்தில் முடிந்த வெலிக் கடை சிறைச்சாலைத் தேடுதல் நடவடிக்கையின் போது 41 தொலைபேசிகளும் 18 கிராம் போதைப்பொருளும் 22 சிம் காட் டுகளும் கண்டுபிடிக்கப்பட்டதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச் சர் சந்திரசிறி கஜதீர தெரிவித் தார்.

சிறை வைக்கப்பட்டிருந்த கடும குற்றவாளிகள் பல குற்றச்செயல களைத் திட்டமிட்டு செயற்படுத்தி யுள்ளதுடன், போதைவஸ்து கடத்தல்களையும் நெறிப்படுத்தி யுள்ளதாக அமைச்சர் கஜதீர நாடாளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் சிறையிலிருந்த வாறே வெளிநாடுகளிலுள்ள நண்பர்களுடன் தொடர்புகளை வைத்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனநாயக தேசிய கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திசாநாயக்காவின் கேள்விக்கு பதிலளித்த புனர் வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர், சிறைச் சாலைகள் ஆணையாளர் நாய கம்தான் விசேட அதிரடிப்படை யினரின் உதவியைக் கோரிய தாக கூறினார்.

இது சிறைச்சாலை சட்டத்தின் பிரிவு 77 ஆம் சரத்தின்படி சட்ட ரீதியானதாகும் என அவர் குறிப்பிட்டார். வெலிக்கடை சிறைச்சாலை கலவரத்தை ஆராய நியமிக்கப்பட்டுள்ள மூன்று பேர் கொண்ட குழு, இதன் பின்ன ணியில் இருந்தவர்களை கண்டு பிடிக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த மூவர் குழுவில் தமக்கு நம்பிக்கை இல்லை எனத் தெரி வித்த எதிர்க்கட்சியின் பிரதான கொறடாவான ஜோன் அமர துங்க, இதற்கென ஒரு நாடாளு மன்றத் தெரிவுக்குழு நியமிக கப்பட வேண்டும் என்றார்.

# தென்பகுதி கல்வி அபிவிருத்தி; அமெரிக்கா நிதியுதவி அளிப்பு



(கொழும்பு)

அமெரிக்கா இலங்கையின் தென்பகுதி அபிவிருத்தி தொடர் பில் அவதானம் செலுத்த ஆரம் பித்துள்ளது.

இதனடிப்படையில் அமெ ரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் மிச்சேல் ஜே சிசன் நேற்று முன்தினம் தென் மாகாணத்தின் பல பகுதிகளுக் கான விஜயத்தை மேற்கொண்டி ருந்தார். காலி டச்சு கோட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிக ளுக்கும் அவர் சென்றிருந்தார்.

இதன் போது அவர் தென் மாகாணத்தின் கல்வி, கலாசார மற்றும் பொருளாதார அபிவிருத் திகள் தொடர்பில் ஆராய்ந் திருப்பதாக அமெரிக்கத் தூதர கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தென்மாகாணத் தின் கல்வி அபிவிருத்திக்காக, அமெரிக்கத் தூதகரம் 10 மில்லி யன் டொலர்களை நிதியாக வழங்க உறுதியளித்துள்ளார். இதற்கிடையில் பல்வேறு புல மைப் பரிசில் திட்டங்களையும் வழங்க இணக்கம தெரிவித்துள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விமான சிதைவுகளை மீட்கும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

1998 ஆம் ஆண்டில் விடு தலைப் புலிகளால் சுட்டு வீழ்த் தப்பட்டதாக நம்பப்படும் "லயன் எயார்" பயணிகள் விமானத்தின் உடைந்த பாகங்களை மீட்கும் பணியினை கடற்படையினர் ஆரம பித்துள்ளனர்.

மன்னார் கடலில் இரணை தீவுக்கு அப்பால் காணப்படும் இந்த விமானத்தின் பாகங்களை மீட்கும் நடவடிக்கையைப் பார்வையிட நேற்றுமுனதினம் நீதவான் சென்றிருந்தார்.

நீண்ட காலமாக காணாமற் போனோர் என வகைப்படுத்தப் பட்டிருந்த பயணிகளுக்கு என்ன நடந்தது எனத் தீர்மானிக்கவே நீதவான் சம்பவ இடத்துக்குச் சென்றிருந்தார்.

குறித்த விமானம் விழுந் திருந்த இடத்தை கடற்படை யினர் கடந்த மாதம் கண்டு பிடித்திருந்தனர். சிவசுப்பிரமணி யம் தில்லைராஜ் என்பவரிடம் பயங்கரவாத விசாரணை திணைக் கள அதிகாரிகள் நடத்திய விசா ரணையின் போது, 14 வருடங் களுக்கு முன் காணாமற்போன விமானத்தை புலிகள் சுட்டு வீழத் தினர் எனும் தகவலைப் பெற்றனர்.

ரஷ்ய அன்ரனொவ் 24 ரகத் தைச் சேர்ந்த இந்த விமானம், கடந்த 1998 ஆம் ஆண்டு செப் ரெம்பர் 29 ஆம் திகதி, பலாலி விமான நிலையத்திலிருந்து 48 பயணிகள், 6 உக்ரேனிய விமானி கள் சகிதம் இரத்மலானை நோக்கிப் புறப்பட்டது.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் அது ராடரிலிருந்து மறைந்து போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எண்ணெய் இறக்குமதியில் அவசரம்; ஏற்பட்டது பாரிய நட்டம்

(கொழும்பு)

அவசரமாக மசகு எண்ணெயை இறக்குமதி செய்தமையினால் இலங்கை பெற்றோலியக் கூட் டுத்தாபனத்திற்கு பாரியளவில் நட்டம் ஏற்பட்டுள்ளது.

இதன்படி, அவசரமாக மசகு எண்ணெயை இறக்குமதி செய்த தனால் பெரல் ஒன்றுக்கு 3 அமெரிக்க டொலர்கள் மேலதிக மாகச் செலுத்தப்பட்டுள்ளது.

ஈரான் மீதான பொருளா தாரத் தடை காரணமாக மசகு எண்ணெய் இறக்குமதி நட வடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந் தன.

இதன் காரணமாக ஓமானிலி ருந்து அண்மையில் மசகு எண் ணெய இறக்குமதி செய்யப்பட் டது.

பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தில் திறமையான அதி காரிகள் நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளாமையே இவ் வாறான நட்டங்கள் ஏற்படக் காரணம் என பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

# 60 மில்லியன் செலுத்த வேண்டுமென்ற ஹெஜிங் தீர்ப்பு அரசுக்கு எதிரானது

(கொழும்பு)

டொச் வங்கிக்கு 60 மில்லி யன் அமெரிக்க டொலர் செலுதத வேண்டுமென்ற நடுவர் தீர்ப்பு, இலங்கை அரசாங்கத்துக்கு எதிரானதேயன்றி அரசாங்க நிறு வனமான இலங்கை பெற் றோலிய கூட்டுத்தாபனத் துக்கு எதிரானது அல்ல என அந்தக் கூட்டுத்தாபனம் கூறியுள் ளது.

அது அரசாங்கத்துக்கு எதிரானது. எமக்கு எதிரானது அல்ல என இலங்கை பெற் றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுசந்த சில்வா கூறியுள்ளார்.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மத்தியஸ்த நிறுவனத் தின் தீர்ப்பின்படி டொச் வங்கிக்கு எதிராக 60 மில்லியன் அமெரிக்க டொலர் ஹெஜிங் வழக்கில் அரசாங்க நிறுவன மான பெற்றோலியக் கூட்டுத் தாபனம் தோல்வி கண்ட தென நவம்பர் 2 இல் அதிகாரிகள் தெரிவித்திருந்த னர்.

எந்தவொரு ஹெஜிங் ஒப் பந்தம் தொடர்பிலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாப னத்துக்கு எதிரான நடுவர் தீர்ப்பு கொடுப்பனவு எதையும் டொச் வங்கி பெறவில்லை என்பதை திட்டவட்டமாக அறிவிப்பதாக சுசந்த சில்வா தனியொரு அறிக்கை மூலம் தெரிவித் துள்ளார்.

# மாதகலில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு படிப்படியாக உதவிகள் வழங்கப்படும்

## – ஈ.பி.டி.பி.யின் வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர்

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தமைக்கு அமைவாக மீள்குடியமர்ந்த மக்களுக்கான உதவிகள் படிப்படியாக வழங்கப்படுவதுடன், அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் வலிகாமம அமைப்பாளருமான ஜீவா தெரிவித்துள்ளார்.

மாதகல் மேற்கு ஜே.152 கிராம சேவையாளர் பிரிவில் மீள் குடியமர்ந்த மக்களுக்கான கூரைத்தகடுகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்ட நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடற்படையினரின் வசமிருந்த மாதகல் பகுதி மக்களின் குடியிருப்புக் காணிகள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்வதற்கான வழி ஏற்பட்டுள்ளது. எவ்வளவு விரைவாக மக்கள் தமது காணிகளைத் துப்பரவு செய்து மீள் குடியமர முடியுமோ அவ்வளவு விரைவாக அவர்களின் வாழ்வாதாரத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

இப்பகுதியில் மீள் குடியமர்ந்த மக்களுக்கான குடிநீர் வசதி தற்போது ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. அதே போன்று வீதி அபிவிருத்தி, மின்சார வசதி என்பன விரைவில் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்ததுடன் கூரைத்தகடுகள் கிடைக்காத குடும்பங்களுக்கு ஓரிரு தினங்களில் அவை வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஜே.152 கிராம சேவையாளர், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி நிர்மலா, வலிதென்மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் வலி. தென்மேற்கு பிரதேச அமைப்பாளருமான அன்ரன் ஜோன்சன் (ஜீவா) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அதிகரிக்கிறது டெங்கு 2 நாட்களில் 10 பேர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் கடந்த இரண்டு நாட்களுக்குள் டெங்கு நோய்த் தொற்றுக்குள்ளான 10 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்திய சாலையின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் சாவகச்சேரியில் இருந்து ஒருவரும் சாவற்காடு பகுதியில் இருந்து இருவருமாக மூவரும் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரியில் இருந்து இருவரும், கொடிகாமம், கொக்குவில், பாசையூர், கொழும்புத்துறை, முத்திரைச் சந்தி ஆகிய பகுதிகளிலிருந்து தலா ஒவ்வொருவருமாக ஏழு பேர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் இந்த மாதத்தில் நேற்று முன்தினம் வரை 36 டெங்கு நோயாளிகள் வைத்திய சாலை யில் சிகிச்சைக்கு அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

தற்சமயம் மழை காலம் ஆரம்பமாகியுள்ளதன் காரணமாக இந்நோயின் தாக்கம் மேலும் அதிகரிக்கக்கூடிய நிலை உள்ளதாகவும் யாழ். போதனா வைத்திய சாலையின் தெற்று நோய்த் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (பா)

# மாணவிகள் சாதனை

(மண்டைதீவு)


மண்டைதீவு பாடசாலைகளில் கல்வி பயிலும் 2 மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

மண்டைதீவு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த இ.தரணிகா 157 புள்ளிகளையும், மண்டைதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலையைச் சேர்ந்த அ.கீர்த்தனா 156 புள்ளிகளையும் பெற்று சாதனை படைத்துள்ளதுடன் இவர்களைப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் பாராட்டியுள்ளனர். (23)

# மெகா வாசி தெரிவு

இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் மெகா வாசி - 3 ஆவது குலுக்கல் வெற்றியாளர் தெரிவு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.45 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளர் பிரதமவிருந்தினராக்வும், எஸ்.கௌரிசங்கர் கௌரவவிருந்தினராகவும் இலங்கை வங்கியின் வடபிராந்திய பிரதிப்பொது முகாமையார் கே.இ.டி.சுமணசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.



உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலைக்கு மார்க்கண்டு குடும்பத்தினரால் போட்டோ பிரதி இயந்திரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இயந்திரத்தை குடும்பத்தினர் பாடசாலை அதிபர் தி.தேவதயாளனிடம் கையளிப்பதைக் காணலாம்.

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்ற தினத்தை முன்னிட்டு மன்ற இளைஞர்களால் இரத்ததானம் எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு கலைத்தூது மண்டபத்தில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (27)

# முரசின் இன்றைய பலன்

**(16.11.2012 – வெள்ளிக்கிழமை)**

நந்தன வருஷம் கார்த்திகை மாதம் 01 ஆம் திகதி. நட்சத்திரம் கேட்டை.
மரணயோகம் முற்பகல் 10.51 வரை. திதி திருதியை முன்னிரவு 9.33 வரை. கரி நாள்
இராகுகாலம் 10.38 - 12.08 வரை. சுபநேரம் 6.08 - 7.38 வரை.
எமகண்டம் 3.08 - 4.38 வரை, குளிகன் காலம் 7.38 - 9.08 வரை.
ஸ்கந்த ஷஷ்டி விரத 3 ஆவது நாள்.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | நினைத்த காரியம் முடியும். நண்பர் நல்வழிகாட்டுவர். தொழில் அபிவிருத்தி. பணவரவு. குடும்ப மகிழ்ச்சி. கடன் தொந்தரவு தீரும். உடல்நலம் சிறக்கும். |
| ரிஷபம் | அறிமுகமில்லாதவர்க்கும் உதவிபுரிவீர்கள். தொழில் இடையூறு விலகும். இலாபம். பணம் வசூலாகும். கடன் நீங்கும். கண்களின் பாதுகாப்பில் கவனம். |
| மிதுனம் | நிதான செயலே நன்மை தரும். எவருடனும் சச்சரவு கூடாது. வேலைப்பளு அதிகரிக்கும். பணவரவில் மந்தம. அசதி இருக்கும். குடும்பத்தினர் உதவி. |
| கடகம் | செயல்களில் கவனச் சிதறல். பொறுப்புணர்வும், பிறர் ஆலோசனையும் நிலைமையை சீராக்கும். பேச்சை குறைக்கவும். பணவர்வு தாமதம். |
| சிம்மம் | எடுத்த காரியம் கைகூடும். மனதில் உற்சாகம், நம்பிக்கை, துணிவு. சமயோசிதம் தொழிலை வளர்க்கும். பணவரவு முக்கிய செலவுக்காகும். பிணி குறையும். |
| கன்னி | கோபமும் உணர்ச்சி வசப்படுதலும். நண்பர் துணை ஆறுதல். தொழில் சீராக முயற்சி துணை நிற்கும். பணவரவு. சேமிப்பு கை கொடுக்கும். புதிய அறிமுகம். |
| துலாம் | உயர்ந்த செயல்களால் புகழ் பெறுவீர்கள். வாழ்க்கைத்தரம் உயரும். புதிய சாதனை. உறவினர்களிடம் நெருக்கம். பிணி தொந்தரவு குறையும். |
| விருச்சிகம் | திறமையைக் காட்டுவீர்கள். நண்பர், உறவினர் அதிக அன்பு. தொழில் அபிவிருத்தி. ஆதாய பணவரவு. புத்திரரின் படிப்புக்கு உதவி. பிறர் நலன் கருதுவீர்கள். |
| தனுசு | மனதில் புத்துணர்வு. பலருக்கும் உதவுவீர்கள். தொழில் அபிவிருத்தியாகும். முக்கிய தேவை நிறைவேறும். நல்லோரின் வருகை. குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| மகரம் | உதவி புரிந்து நற்பெயர். தொழிலில் அனுகூலம். தாராள பணவரவில் தான, தர்மம். உறவினர் வருகை. வழக்கு வெற்றி. புத்திரரால் மகிழ்ச்சி. கௌரவம் கிடைக்கும். |
| கும்பம் | ஓய்வு. கவனக் குறைவால் பணச்செலவு. பயணத்தில் மாறுதல். எதிர்காலத் திட்டமிடல். விரும்பியது தேடி வரும். தர்ம எண்ணம். வெளியூர் நற்செய்தி. |
| மீனம் | நண்பரால் நன்மை. மனதில் உற்சாகம், நம்பிக்கை. தொழிலில் இலாபம். உபரி வருமானம். உறவுகளிடம் மதிப்பு உயரும். கடன் தொந்தரவு தீரும். |

# கந்தசஷ்டி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கருங்காலி - போசுட்டி ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயத்தில் கந்தஷஷ்டி பெருவிழா நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இவ் உற்சவ காலத்தில் விசேட அபிஷேகங்கள், ஆராதனைகள் என்பன இடம்பெற்று வருகிறது.

# மலசல கூடத்தொகுதி அமைப்பு

(பருத்தித்துறை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும், செம்பிறைச் சங்கமும் இணைந்து யாழ்.மாதனை மெ.மி.த.க. பாடசாலைக்கு மலசல கூட தொகுதியை அமைத்து வழங்கியுள்ளன.

இப்பாடசாலையில் நீண்ட காலமாக மலசல கூடப் பற்றாக்குறை காணப்ப ட்டமையினால் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இதனைக் கருத்தில் கொண்டே மேற்படி சங்கங்கள் இணைந்து 3 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா செலவில் மலசல கூடத்தொகுதியினை நிர்மாணித்து வழங்கியுள்ளன. (109)

# பூநகரி பிரதேச செயலகத்தின் சிறுவர் முதியோர் தின விழா

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவின் சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றுவலுவுடையோர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஜெயபுரத்திலுள்ள பிரதேச செயலக உப அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக மேலதிக அரசாங்க அதிபர் செல்லமுத்து ஸ்ரீநிவாசன், பூநகரி 66 ஆவது பிரிவு கட்டளைத் தளபதி பிரிகேடியர் றோகித தர்மசிறி, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உளநலப் பிரிவு பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி எம்.ஜெயராஜ். ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக பூநகரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.ஸ்ரீசெல்வம், பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத்தினம், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன், பூநகரி பிரதேச வைத்திய சாலையின் மருத்துவப் பொறுப்பதிகாரி. எஸ். மதிவதனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.



# சேவாக், புஜாரா சிறப்பாட்டம்
## பலமான நிலையில் இந்தியா

(அகமதாபாத்)

சேவாக், புஜாரா ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது.

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று அகமதாபாத் மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய சேவாக், கம்பீர் இணை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணிக்கு பலமான அடித்தளத்தை இட்டனர். இவர்களைத் தவிர புஜாரா சிறப்பான முறையில் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கப் பக்கபலமாக இருந்து வருகின்றார்.

இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, இந்திய அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 323 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சேவாக் 117, கம்பீர் 45, ஹோலி 19 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது புஜாரா 98, யுவராஜ்சிங் 24 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர். பந்துவீச்சில் ஸ்வான் மிகச் சிறப்பாகப் பந்து வீசி நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.



# நயீன் இஸ்லாம் சதம் பங்களாதேஷ் பதிலடி

(டாக்கா)

நயீன் இஸ்லாமின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணியும் பதிலடி கொடுத்து வருகின்றது.

மேற்கிந்தியத்தீவு, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் டாக்காவில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 522 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் சந்தர்போல் இரட்டைச் சதம், பவள், ராட்மன் ஆகியோர் சதம் பெற்றனர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடி வரும் பங்களாதேஷ் அணி நயீன் இஸ்லாமின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுள்ளது. இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, பங்களாதேஷ் அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 424 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் நயீன் இஸ்லாம் 108 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ஹஸிப் அல் ஹசன் 89, ராகீம் 43, தமிம் இக்பால் 72 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராம்போல் மூன்று, டரன் சமி இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பங்களாதேஷ் அணி நான்கு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 103 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

# பிரிகிறது மகேஷ் பூபதி ஜோடி

ரென்னிஸ் இரட்டையர் பிரிவில் இணைந்து விளையாடி வந்த இந்தியாவின் மகேஷ் பூபதி மிரோகன் போபண்ணா ஜோடி அடுத்த ஆண்டில் இருந்து வெவ்வேறு ஜோடிகளுடன் இணைந்து விளையாடவுள்ளனர். இந்த ஆண்டில் மகேஷ் பூபதி மிரோகன் போபண்ணா ஜோடி டுபாய் மற்றும் பாரிஸ் ஏ.டி.பி. போட்டியில் சம்பியன் பட்டம் வென்றது. லண்டனில் நடைபெற்ற உலக டூர் இறுதி சுற்று ரென்னிஸ் போட்டியில் 2ஆவது இடம் பெற்றது. ரோகன் போபண்ணா அமெரிக்க வாழ் இந்தியரான ராஜீவ் ராமுடன் இணைகிறார். மகேஷ்பூபதி கனடா வீரர் டானியல் நெஸ்டருடன் ஜோடி சேருகிறார்.

# கட்டுப்பாடு விதித்தால் செய்திகள் இல்லை

கட்டுப்பாடுகளை விதித்தால் இந்தியா-இங்கிலாந்து டெஸ்ட் போட்டி தொடர்பான செய்திகளை வெளியிட மாட்டோம் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு (பி.சி.சி.ஐ.) ஏ.எப்.பி. உள்ளிட்ட சர்வதேச செய்தி நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

பி.சி.சி.ஐ.யின் செயலுக்கு வருத்தம் தெரிவித்துள்ள செய்தி ஊடகக் கூட்டமைப்பு, கெட்டி இமேஜஸ், ஆக்ஷன் இமேஜஸ் போன்ற புகைப்பட நிறுவனங்கள் மீதான தடை குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இந்தியா-இங்கிலாந்து இடையிலான் டெஸ்ட் தொடர் இந்த ஆண்டின் மிக முக்கிய கிரிக்கெட் கிரிக்கெட் தொடராகும். அது தொடர்பான செய்திகளை நாங்கள் வெளியிடாவிட்டால் இலட்சக்கணக்கான இரசிகர்கள் பாதிக்கப்படுவார்கள். கிரிக்கெட் ஸ்பொன்ஸர்ஷிப்பும் பாதிக்கப்படும்.

எங்களிடம் புகைப்படக்காரர்கள் இருக்கிறார்கள், நாங்கள் படம் தருகிறோம் என்று பி.சி.சி.ஐ. கூறுகிறது. ஆனால் நாங்கள் நினைக்கும் வகையில் அந்த படம் இருக்காது.

செய்தி நிறுவன புகைப்படக்காரர்கள் அங்கு செல்லக் கூடாது, இங்கு செல்லக்கூடாது என்று பி.சி.சி.ஐ. கட்டுப்பாடுகளை விதிக்கிறது. இது மிக மோசமான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என்று செய்தி நிறுவனங்கள் அஞ்சுகின்றன. பி.சி.சி.ஐ.க்கு பல வாய்ப்புகளை கொடுத்த போதிலும், அவர்கள் இதுவரை விளக்கமளிக்கவில்லை.

உலக முழுவதிலும் கிரிக்கெட்டுக்கு பெரும் ஆதரவை அளித்து வரும் செய்தி நிறுவனங்களை அவமதிக்கும் பி.சி.சி.ஐ.யின் இந்தச் செயலுக்காக வருந்துகிறோம் என்று கூறியுள்ளது. ஏஜென்ஸ் பிரான்ஸ்-பிரெஸ் என்ற செய்தி நிறுவனங்களின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்த விவகாரம் தீர்க்கப்படாவிட்டால் இந்தியா-இங்கிலாந்து இடையிலான டெஸ்ட் தொடர் குறித்த செய்திப் படங்களை வெளியிடமாட்டோம் என்று எச்சரித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் சபையின் இந்தச் செயலுக்கு, இந்திய அணியின் முன்னாள் வீரர்கள் பலர் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இது ஒரு முட்டாள் தனமான செயல் என்றும், செய்தியாளர்களைச் சுதந்திரமாகச் செயற்படவிட்டால் மாத்திரமே அது தரமானதாகவும், வலுவானதானவும் இருக்கும் என அவர்கள் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தற்புகழ்ச்சி வேண்டாம்



(சிட்னி)

தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சே உலகில் சிறந்த வேகப்பந்து வீச்சு அணியாக உள்ளதென தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்ட வீரர் ஹசிம் அம்லா தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய அணி சிறப்பான பந்துவீச்சு வரிசையைக் கொண்டுள்ளது., அத்தோடு சொந்த நாட்டில் விளையாடும் அனுகூலமும் அவர்களுக்கு உள்ளது.

தற்போதைய நிலையில் உலகின் சில பந்துவீச்சு வரிசைகள் சிறப்பானவையாகக் காணப்படுகிறது. இதில் என்னுடைய கருத்துப்படி தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சு வரிசையே உலகில் சிறந்ததாக உள்ளது. அத்தோடு அவுஸ்ரேலிய, இங்கிலாந்து அணிகளின் பந்துவீச்சுவரிசைகளும் மிகச்சிறப்பானவை என அவர் தெரிவித்துள்ளார். இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிரேஷ்ட வீரர்களுக்கு அரவிந்த ஆலோசனை

நியூசிலாந்து அணிக்கெதிராக இடம்பெறவுள்ள டெஸ்ட் தொடரின் போது இலங்கை துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிக பொறுப்புக்கள் இருக்கின்றது. அதை அவர்கள் சரிவரச் செய்ய வேண்டும். அவர்கள் சிறப்பாகச் செயற்பட்டால் மாத்திரமே இளம் வீரர்கள் சுமையின்றி ஆடுவார்கள் என இலங்கை அணியின் முன்னாள் வீரர் அரவிந்த டி சில்வா தெரிவித்துள்ளார். நியூசிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டியின் போது இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்கள் மிகச் சிறப்பாக செயற்பட வேண்டும்.அவ்வாறு செயற்படும் பட்சத்திலேயே இலங்கை அணியால் போட்டியில் பிரகாசிக்க முடியும். இளம் வீரர்களுக்கு வழிகாட்டியாக அவர்கள் இருக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். .

# கலப்பு இரட்டையரில் சானியாவுடன் இணைவு

கலப்பு இரட்டையர் பிரிவு ரென்னிஸ் போட்டிகளில் இந்திய வீராங்கனை சானியா மிர்சாவுடன் இணைந்து விளையாடத் தயாரென அமெரிக்க டென்னிஸ் வீரர் பொப் பிரையன் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சர்வதேச ரென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவுப் போட்டிகளில் இந்திய நட்சத்திர வீராங்கனையான சானியா மிர்சாவுடன் இணைந்து விளையாடவுள்ளார். இந்நிலையில் 34 வயதான அமெரிக்க ரென்னிஸ் வீரர் பொப் பிரையன் தனது சகோதரரான மைக் பிரையனுடன் இணைந்து அண்மையில் லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் இரட்டையர் பிரிவு போட்டியில் தங்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.


இது குறித்து பொப் பிரையன் கூறுகையில்,

சானியா மிர்சா திறமையான வீராங்கனை. முன்னர் இடம்பெற்ற தொடர்களின் போது நான் இவரைச் சந்தித்துள்ளேன். ஆனால் இனிவரும் காலங்களில் இவருடன் இணைந்து போட்டியில் விளையாட விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு யு.எஸ்.இ ஓப்பன் ரென்னிஸ் தொடரின் போது கலப்பு இரட்டையரில் சேர்ந்து விளையாட சானியா விரும்பம் தெரிவித்திருந்தார். ஆனால் வேறு ஒரு வீராங்கனையுடன் ஒப்பந்தம் இருந்ததால் என்னால் விளையாட முடியாமல் போனது.

இந்நிலையில், அடுத்த ஆண்டு நடக்கவுள்ள அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரில் இணைந்து விளையாடுவோம் எனக் கூறினேன். இவருடன் இணைந்து அவுஸ்ரேலிய ஓப்பனில் விளையாட இருப்பது அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

அடுத்த இரண்டு மாதங்களில் இத்தொடருக்கு சிறந்த முறையில் தயார் செய்து சாதிக்கப் போராடுவோமெனக் கூறினார்.



# சச்சினை சாராதீர்

(புதுடில்லி)

இங்கிலாந்து தொடரில் இந்திய அணி, சச்சினை மட்டும் சார்ந்து இருக்கக் கூடாது, என, கபில்தேவ் தெரிவித்தார். இங்கிலாந்து தொடரில் அனைவரது கவனமும் சச்சின் மீது தான் இருக்கும். அவர் இந்திய அணியின் முக்கிய வீரர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனாலும் அவரை மட்டும் சார்ந்து இருக்கக் கூடாது. இளம் வீரர்கள் பொறுப்புகளை தங்கள் தோளில் சுமக்கும் நேரம் வந்துவிட்டது.

சுழலுக்குச் சாதகமான ஆடுகளத்தில் விளையாடும் போது, நாணயச் சுழற்சி முக்கிய பங்கு வகிக்கும். ஏனெனில், இதுபோன்ற நிலையில் எந்த அணியும் முதலில் துடுப்பாட்டம் செய்யவே விரும்பும். இதனால், அணியின் பலத்திற்கு ஏற்ப ஆடுகளங்கள் அமைக்கப்பட வேண்டும். இல்லையெனில், அதுவே எமக்கு எதிராகத் திரும்பி விடும்.

இங்கிலாந்து அணியில் வலுவான துடுப்பாட்ட வீரர்கள், சகலதுறை வீரர்கள் உள்ளனர். அந்த அணியின் பந்துவீச்சும் நன்றாக உள்ளது. டெயிலெண்டர்கள் வரை துடுப்பாட்ட வரிசை நீளுகிறது. இவர்களிடம் உள்ள ஒரே பலவீனம், ஒருங்கிணைந்து விளையாடாதது தான் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலகுவான வீசா வேண்டும்

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டிகளைப் பார்வையிட இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ள பாகிஸ்தானைச் சேர்ந்த இரசிகர்களுக்கு இலகுவான வீசா நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாகிஸ்தானின் முன்னாள் தலைவரும், பாகிஸ்தான் சார்பாக அதிக போட்டிகளில் பங்குபற்றியவருமான இன்ஸமாம் உல் ஹக் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், இந்தியாவிற்குப் பயணம் செய்ய விரும்பும் இரசிகர்களுக்கு இலகுவான வீசா நடைமுறையை இந்திய அரசு பின்பற்ற வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். இந்தியா பின்பற்றவுள்ள பாதுகாப்பு நடைமுறைகளில் தளர்வு ஏற்படாத அதே வேளை பாகிஸ்தானிய இரசிகர்களுக்கு இலகுவான முறையைப் பின்பற்றக் கூடியதுமான திட்டமொன்றை வகுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். பாகிஸ்தானைச் சேர்ந்த இரசிகர்கள் இந்தியாவிற்குவருவதானால் இந்தியாவில் அவர்களுக்கென அனுசரணையாளர் ஒருவர் காணப்பட வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டுவர இந்தியக் கிரிக்கெட் சபை சிந்தித்து வருவதாக வெளியான தகவல்களை அடுத்தே இன்ஸமாம் உல் ஹக் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.



மாகாண மட்டப் போட்டியில் சம்பியனான யாழ். மாவட்ட தெரிவு அணி

# மன்னார் அணியை வீழ்த்தி யாழ். மாவட்டம் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் யாழ். மாவட்ட தெரிவு அணி சம்பியனானது.

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தெற்காசியப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு இலங்கை தேசிய அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்கான வடமாகாண மாவட்டங்களின் 21 வயதுப் பிரிவினர்களுக்கான கால்பந்தாட்டப் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகின.

அரையிறுதிப் போட்டியில் மன்னார் மாவட்ட அணி, வவுனியா மாவட்ட அணியை வென்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்ட அணி, முல்லைத்தீவு மாவட்ட அணியை வென்றதுடன், கிளிநொச்சி மாவட்ட அணியை 6 : 0 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்குத் தெரிவானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்ட அணி மோதியது. தொடக்கம் முதல் இரு அணிகளும் கடுமையாக மோதின. அடிக்கடி மைதானத்தில் மஞ்சள் அட்டைகள் நடுவரால் காட்டப்பட்ட வண்ணம் இருந்தது. இரு அணிக்கும் கோல் போடும் வாய்ப்புக்கள் ஏற்பட்டும் அது கைகூடவில்லை. இந்நிலையில் யாழ்ப்பாண வீரர் யூட் தனி ஆளாக எதிரணியின் தடைகளை உடைத்து அணிக்கு முதலாவது கோலினை போட்டார்.


முதல் பாதி ஆட்டத்தில் 1 : 0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாண மாவட்ட அணி முன்னிலையிலிருந்தது.இரண்டாவது பாதி ஆட்டத்தில் இருஅணிகளுக்கும் கோல் வாய்ப்புக்கள் பல தடவைகள் கிடைத்தன. மன்னார் மாவட்ட அணி இறுதி நேரத்தில் மிக வேகமாக விளையாடி யாழ்ப்பாண மாவட்ட கோல் கம்பத்தினை நோக்கி அடிக்கடி முன்னேறியது.

இருந்தும் கோல் அடிக்கும் சந்தர்ப்பங்கள் தடுக்கப்பட்டன. இரண்டாவது பாதி ஆட்டத்தில் எதுவித கோல்களும் போடப்படாததினால் 1 : 0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாண மாவட்ட அணி வெற்றிபெற்று சம்பியனாகியது. வெற்றிபெற்ற அணிக்கான வெற்றிக் கிண்ணங்களை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கினார். (93, 20)





## விளையாட்டு உபகரணம் வழங்கல்



(கொக்குவில்)

யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கொக்குவில் இந்துக்கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இலங்கைக் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாண கிரிக்கெட் சங்கத்தினூடாக இவ்விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 16 விளையாட்டுக் கழகங்களுக்கு இவ்விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண கிரிக்கெட் சங்கத் தலைவர் ம.சந்திரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் வழங்கினார்.

# பாடுமீன் அணி சம்பியன்



(உரும்பிராய்)

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் குருநகர் பாடுமீன் அணி சம்பியானானது. யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்,தனது அங்கத்துவ கழகங்களின் விசேட எட்டு அணிகளுக்கிடையில் விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தியது. இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் குருநகர் பாடும் மீன் அணியும் ஊரெழு றோயல்ஸ் அணியும் மோதின.

தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய பாடுமீன் அணி முதல் கோலை அடித்தது. இந்நிலையில், முதல் பாதி ஆட்டம் 1 : 0 என்ற கணக்கில் முடிவடைந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஊரெழு றோயல்ஸ் அணி சுதாகரித்து ஆடியது. எனினும் அவ்வணியால் கோல் எதனையும் போட முடியாமல் போனது. இத்தருணத்தில் தமக்கு கிடைத்த வாய்ப்பை பயன் படுத்திக்கொண்ட பாடுமீன் அணி இரண்டாவது கோலையும் போட்டது. இந்நிலையில் இரண்டாம் பாதி ஆட்டத்தில் பாடுமீன் அணி 2 : 0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனாகியது.

## பிற்போடப்பட்டது மைதானத் திறப்பு

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதி அரியாலைப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் கால்பந்தாட்ட மைதானத் திறப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். கால்பந்தாட்ட லீக் தலைவர் அன்ரனிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் வெளிநாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் பீபா ஆகியவற்றின் நிதியுதவியுடன் ஏ9 வீதி அரியாலைப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் கால்பந்தாட்ட மைதானம் எதிர்வரும் 19 ஆம் திகதி திறந்து வைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் குறித்த திகதியில் இம்மைதானம் திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், மைதானம் திறக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் தலைவர் அன்ரனிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.



## திருத்துவக் கல்லூரி சதுரங்க வீரர்

# ரஷ்யா பயணம்

(கொழும்பு)

கண்டி திருத்துவக் கல்லூரியில் 3 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவன் பிரபாகர் ஹரிகிஷன் சதுரங்கப் போட்டியில் பங்குபற்றுவதற்காக ரஷ்யா பயணமாகியுள்ளார்.

உலக இளைஞர் அணிகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டி ரஷ்ய ஸ்லோவேனியாவில் (பல்பேனியா) கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமாகியது. இப்போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி நிறைவடையும். 7 வயதான இந்தச் சிறுவன், சர்வதேச சதுரங்கச் சம்மேளனம், அகில இலங்கை பாடசாலை சம்மேளனம், இலங்கை சதுரங்கச் சம்மேளனம் மற்றும் பல பிரத்தியேக சதுரங்கச் சம்மேளனங்கள் நடத்திய போட்டியில் பங்குபற்றி பல பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டார்.

போலந்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற உலக பாடசாலைகளுக்கு இடையிலான போட்டியில் பங்கேற்று நான்காம் இடத்தையும் அதே ஆண்டு டிசம்பர் மாதம் டில்லியில் நடைபெற்ற ஆசிய பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கப் போட்டியில் பங்கு பற்றி வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ரஷ்யாவில் நடைபெறும் சதுரங்கப் போட்டியில் திறமைகளை வெளிப்படுத்தி பிரபாகர் ஹரிகிஷன் வெற்றிபெற பல தரப்பினரும் வாழ்த்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கருணையற்ற மனம் ≠ தமிழ்ச் சமூகத்தின் இதயம்?

**- அரவிந்தன் கட்டுரையிலிருந்து.**


**பொ**றுப்புகளைத் தட்டிக்கழிக்கும் தலைவர்களும் கடமைகளைச் செய்யத் தவறும் பெற்றோரும் நிலைமைகளைப் புரிந்து கொள்ளாத மூத்தோரும் உண்மைகளை ஏற்றுக்கொள் ளாத ஊடகவியலாளரும் கருணையும் இரக்கமுமில்லா மக்களும் வரலாற்றாற்றில்

ஈடேற்றத்துக்காகத் தம்மை முழுதாகவே அர்ப்பணிக்கும் இயல் பினரை அதிகளவில் கொண்டிருந்த ஈழத்தமிழ்ச் சமூகத்திற்தான் உச்சமான சுயநலமும் உள்ளது.

கடந்த காலத்தில் விடுதலைக் காகத் தம்மை அர்ப்பணித்தவர் களைத் தவிர, போராட்டத்தில் ஈடுபட்டோரைத் தவிர, இன்னொரு சாரார், கல்வியிலும் பிற தொழிற்றுறைகளிலும் தங்களை மேம்படுத்திக் கொண்டனர். என்னதான் இதற்கு நியாயங்கள் கூறினாலும்

சொந்த இடத்திலேயே அவர்கள் இந்தப் பாதிப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்ததால், ஈடுசெய்து கொள்ள முடியாத அளவுக்கு நெருக்கடிக்குள்ளாகினர்.

குறிப்பாகப் போக்கிடமற்ற ஒரு நிலைக்கு, மீட்சி கொள்ளக் கடினமான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதில் வடக்குக் கிழக்குத் தமிழர்களே அதிகமானவர் களாக இருந்தனர். அதிலும் வன்னியைச் சேர்ந்தவர்களும் வாகரை மற்றும்



அவலத்தைத் துடைப்பதில், இந்தச் சனங்களின் வாழ்க்கைக்குத் துணையிருப்பதில் பெரும் பங்களிப்புக்கு இடமுண்டு.

தவிர, போரில் அதிக பாதிப்புகளைச் சந்தித்திராத வடக்குக் கிழக்கின் நகர்ப்புறத்துத் தமிழர்களுக்கும் இதில் கூடுதலான கடமையுண்டு.

ஆனால் யாரும்

தண்டிக்கப்படுவர்.

இலங்கைத் தமிழர்களின் நிலை ஏறக்குறைய இதை ஒத்ததாகவே உள்ளது.

"ஈழத்தமிழர்களுக்குப் பிறத்தியார் இழைத்த அநீதிகளுக்கு நிகரானவை அவர்களுக்குள்ளே இருக்கும் குறைபாடுகளும் தீங்குகளுமா கும்" என்று ஒரு நண்பர் அடிக்கடி சொல்வார்.

உள்ளடுக்குகளில் ஜனநாய கமின்மையையும் தார்மீக நெறிகளிற் குறைபாடுகளையும் கொண்டது ஈழத்தமிழ்ச் சமூகம். குறிப்பாகச் சாதீயத்தாலும் பிரதேச வாதத்தினாலும் அறப் பிறழ்வைக் கொண்டது அது.

இதனால், அதனுடைய அரசியலிலும் விடுதலைச் சிந்தனையிலும் பலவீன நிலை கள் இலகுவிற் தொற்றிக் கொண்டன. விளைவு, அது தனது விடுதலைக்கான முயற்சி களில் தொடர்ந்து பின்னடைவு களையே சந்தித்துக் கொண்டிருக்கிறது.

இந்தப் பின்னடைவுகளுக் கான காரணங்களைக் குறித்து மீளாய்வு செய்யவோ சுயவிமர் சனம் செய்யவோ அது தயாராகவில்லை.

இது அரசியலில் ஏற்பட்ட வீழ்ச்சி மட்டுமல்ல. தமிழ்ச் சமூகத்தின் பிற அம்சங்களான மனிதாபினமானத்திலும், கல்வி மற்றும் மருத்துவம் போன்ற அடிப்படையான சேவைமனப்பாங்கிலும் பெருங்குறைபாடுகளையே உருவாக்கியுள்ளது.

விடுதலைக்காக, சமூக



இது மறுக்க முடியாத உண்மை.

இன்று போராட்டத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நடுத்தெருவுக்கு வந்துள்ளனர். இதில் தனியே விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மட்டும் சேர்த்தியல்ல. பிற போராட்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் உள்ளடங்குவர்.

முன்னெப்போதையும் விட இப்போதே ஈழத்தமிழ்ச் சமூகம் பெரும்பாதிப்புகளையும் இழப்புகளையும் சந்தித்துள்ளது. குறிப்பாக 1958, 1977, 1983 ஆகிய காலகட்டங்களில் ஈழத்தமிழர்கள் இனவன்முறை யின் மூலமாகச் சந்தித்த இழப்புகள், கொடுமைகளையும் விடப் பின்னர் சந்தித்த இழப்பு களும் பாதிப்புகளுமே அதிகம்.

படுவான்கரையைச் சேர்ந்த மக்கள் சந்தித்த பாதிப்புகள் வரன்முறைகளுக்கு அப்பாலானவை.

ஆனால், இந்த மக்களின் துயரை ஆற்றுவதற்கு யாரும் முன்வரவில்லை. இனவன்முறையினால் தெற்கிலிருந்து வந்தோரை அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் களிலிருந்து உள்ளூர்ப் பொது அமைப்புகள் வரையில் பராமரித்தன.

ஏனென்றால், அப்போது பாதிக்கப்பட்டு வந்தோரில் கணிசமானவர்கள் மத்தியதர வர்க்கத்தினராக இருந்தனர். இதனால் இவர்களுக்கு உதவவேண்டும் என்ற அபிப்பிராயம் அப்பொழுது

முன்னிலைப்படுத்தப்பட்டது.

வன்னியிலும் வாகரையிலும் படுவான்கரையிலும் பாதிக்கப்பட்டவர்கள் நகர்ப்புறத்து மக்களோ மத்தியதர வர்க்கத்தில் கவனத்தைக் குவிக்கத் தக்க நிலையிலிருந்தோரோ அல்ல.

ஆகவே, அவர்களுக்கு உதவவேண்டும் என்று சிந்திப்போரின் தொகை மிக மிகக் குறைவாகவே உள்ளது. அதைவிடக் குறைவு இவர்களுடைய பாதிப்பை நேரிற் பார்ப்பதற்கே விரும்பாத நிலை. அப்படி யாராவது வந்து பார்த்தாலும் கூட, அதை வைத்தே தமது பிழைப்பையும் பிரசாரத்தையும் மேற்கொண்டு விடுகிறார்கள்.

இந்த நிலையில் இந்தச் சனங்களுக்கான ஆதரவையும் சேவையையும் வழங்கியிருக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களின் அரசியற் தலைமைகளாகத் தம்மைப் பிரகடனஞ்செய்வோரைச் சேர்ந்தது. அதிலும் ஏகபிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்ளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு இதில் அதி கூடிய பொறுப்புண்டு. அவர்களிடத்திற்தான் அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிற தொடர்பாடல் வாய்ப்புகளும் உள்ளன.

இதற்கடுத்ததாக பிற அரசியற் தரப்பினர் அத்தனை பேருக்கும் இந்த மக்களின்

இந்த மக்களுக்குச் செறிவான உதவிகள் செய்தது கிடையாது.

போரினாற் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிற நாடுகள் சில உதவிகளைச் செய்து வருகின்றன. சில சர்வதேசத் தொண்டர் அமைப்புகளும் இந்த வகையான உதவிகளைச் செய்து வருகின்றன.

ஆனால், இந்த அளவுக்கு புலம்பெயர்ந்த தமிழர்களின் அமைப்புகள் எந்தக் குறிப்பிடத்தக்க, பங்களிப்பு களையும் செய்ததாக இல்லை. குறிப்பிடத்தக்க ஒழுங்கமைக் கப்பட்ட உதவிகள் எதையும் செய்ததாகத் தெரியவில்லை.

இவ்வளவுக்கும் உலகமெல்லாம் இருந்த யூதர்கள் ஒன்றிணைந்தே தமக்கென்ற புதிய தேசத்தை உருவாக்கினர். அதற்காக அவர்கள் செறிவான பங்களிப்பைச் செய்தனர் என்றமாதிரிக் கதைப்பதில் மட்டும் ஈழத்தமிழர்கள் கில்லாடிகளாக இருக்கின்றனர்.

ஆனால், தாங்கள் மட்டும் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவோ, பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் மீளுருவாக்கத்துக்காகவோ எத்தகைய பங்களிப்புகளை செய்ய மாட்டார்கள்.

குறைந்த பட்சம் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகக்கூட யாரும் முயற்சிக்கவில்லை.



# தரித்திரம் மட்டும் போதாதா?

**ப**ணம் கொடுக்கிற சங்கதியில் பாரதியாரோடு நிரம்ப ஜாக்கிரதையாகப் பழக வேண்டும். அவருடைய கையில் பணம் இருக்காது என்பது உண்மை. ஆனால் பிச்சைக்காரனுக்குப் பிச்சை போடுவதுபோல, எவரேனும் உதவி செய்ய முன்வந்தால், அவர்கள் பாரதியாரிடம் அவமானப்பட்டுப் போவார்கள். பயபக்தி விசுவாசத்துடன்

கப்பம் வேண்டுமானால் கட்டலாம். அவர் கவிச்சக்கரவர்த்தியல்லவா? அவர் குடைக்கீழ் வாழும் மந்திரிகளும், மன்னர்களும் கிஸ்தி செலுத்தலாம். அல்லது கப்பம் கட்டலாம். கால-ணா கேட்கும் கடைத்தெரு பிச்சைக்காரனா அவர்?

ஒரு சமயம் பாரதியாருக்கு பணத்துக்கு கஷ்டம். வீட்டில் உணவுச் சாமான்கள் இல்லை. ஐந்து ரூபாய் வேண்டுமென்று ஒரு நண்பருக்குக் கடிதம் எழுதி அனுப்பினார் பாரதியார். கடிதத்துக்குப் பதில் இல்லை. சாயங்காலம் அந்த நண்பரைச் சந்திக்க நேர்ந்தது. "பாரதி உங்களுக்கு நான் பணம் அனுப் பியிருப்பேன். இந்த ஒத்தாசை நான் செய்திருந்தால், உங்க ளுக்கு மனச்சமாதானம் ஏற்பட்டு உங்களுடைய மேதையின்

கூர்மை மழுங்கிப் போயிருக்கும். உங்கள் மேதை யை அழித்துவிட எனக்குச் சம்மதமில்லை" என்று முந்திக் கொண்டு நண்பர் சொன்னார்.

பாரதியாருக்குத் தாங்க முடியாத ஆத்திரம். "ஓய்... அளப்பதை நிறுத்தும். மேதைக்குத்தரித் திரம் மட்டும் போதாதா? அதோடு நீர் ஏளனம் வேறு செய்ய வேண் டுமா? உம்முடைய மனப்பான் மையைச் சீர்திருத்தம் செய்ய முடியாது. அதை அடியோடு தலைகுப்புற அடிக்கும் புரட்சித் தத்துவம் இந்த நாட்டுக்குத் தேவை" என்று சொல்லிவிட்டு அந்த இடத்தைவிட்டு அகன்றார்.

இன்னொரு விஷயம். மாலை வேளையில் நண்பர்கள் கூடிக் கொண்டால் அவர்களுக்கு ஏதேனும் சிற்றுண்டிகள் வழங்க வேண்டும் என்று பாரதி யாருக்கு ஆசை உண்டாகும். அந்தச் சமயத்தில் கிருஷ்ண சாமி செட்டியார், அங்கு

அடக்கமாக இருப்பார். பார-தியாரிடம் ஏதாவது செல்லாத பணமிருக்கும். அதை எடுத்து நண்பர்களிடம் காட்டி, "இது செல்லுமா, பார்த்துச் சொல்லுங்கள்" என்பார். நண்பர்கள் "செல்லாது" என்றால், "செல்லும் செல்லாததற்குச் செட்டியார் அதோ இருக்கிறார்" என்று பாரதியார் வாஞ்சையுடன் நண்பரைச் சுட்டிக் காண்பிப்பார்!

மகா சூட்சும புத்தி யுள்ளவரான கிருஷ்ணசாமி செட்டியாருக்கு இந்தக் குறிப் புத் தெரியாதா? உடனே நோட்டோ, பணமோ, வெளியே வரும். பண மில்லாமல் பாரதியாரிடம் வர லாகாது என்பது செட்டியாரின் சங்கற்பமா? செட்டியாரின் மடியில் எப்பொழுதும் பணம் இருக்கும் என்பது பாரதியாரின் நம்பிக்கையா? செட்டியாரைப் போல அபூர்வமான குணங்களைப் படைத்தவர்கள் நம்நாட்டில் சிலபேர்களே.

**('மகாகவி பாரதியார்' என்ற நூலில் வ.ரா.)**

# வெற்றியின் இரகசியம் 06

- சி. அருண்பரத் -

குழந்தைகளிடத்தில் தன்னம்பிக்கையை வளர்க்க, இதோ சில யோசனைகள்:

☆ குழந்தை ஆசைப்படுகிறதே, பிடிவாதம் பிடிக்கிறதே என்ற ஒரே காரணத்திற்காக, எதையும் வாங்கித் தரக் கூடாது. குழந்தையின் வயதிற்கேற்ப, வளரும் சூழ்நிலைக்கேற்ப, அத்தியாவசிய தேவைக்கேற்ப வாங்கித் தர வேண்டும்.

☆ "நான் பட்ட கஷ்டம், என் பிள்ளை படக்கூடாது" என்று சில பெற்றோர் பிள்ளையைக் கஷ்டமே தெரியாமல் வளர்க்கின்றனர். வயதிற்கேற்ப பொறுப்பும், சுதந்திரமும் கொடுத்தால் தான், குழந்தைக்குப் பக்குவமும், முதிர்ச்சியும் வளரும். ஆரம்பத்தில் தவறுகள் செய்தாலும், பின்னர் அவற்றை திருத்திக் கொண்டு, தாமே தனித்து இயங்கக்கூடிய தன்னம்பிக்கை, இளமைப்பருவத்தில் வர வேண்டும்.

☆ தனக்குத் தகுதியிருந்தால் அல்லது இன்றியமையாத தேவையிருந்தால் மட்டுமே, பெற்றோரிடமிருந்து எதுவும் கிடைக்கும் என்பதை, குழந்தை உணர வேண்டும். தகுதி இல்லாமல், உழைக்காமல் கிடைக்கும் எதையும் தக்க வைத்துக் கொள்ளும் திறன், குழந்தைக்கு இருக்க கூடாது.

தன்னம்பிக்கைக்கு முட்டுக்கட்டையாக இருப்பவை எவை? அதை எப்படிக் களைவது:

☆ அவநம்பிக்கை, என்னால் எப்படி முடியும்? நான் எடுத்த காரியம் கைகூடாமல் போய் விடுமோ என்கிற எண்ணங்களை மனதிலிருந்து அறவே அகற்ற வேண்டும்.

☆ தாழ்வு மனப்பான்மை, வறுமை மற்றும் வளர்ந்த சூழ்நிலையால் தாழ்வு மனப்பான்மை உள்ளவர்கள், முதல் தலைமுறை செல்வந்தர்களின் வரலாற்றைப் படித்துப் பாருங்கள். பெரும்பாலானோர் சிறுவயதில், கடும் வறுமையில் வாடியிருப்பர். பல அவ்மானங்களைச் சந்தித்திருப்பர். ஆக, வறுமை நம்முடைய வளர்ச்சிக்கு உத்வேகமாக இருக்க வேண்டுமே தவிர, முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது. அதுபோல, குறைவான கல்வியறிவு, எளிமையான குடும்பச் சூழ்நிலை, வழி நடத்த யாரும் இல்லை போன்ற காரணங்கள், நம்முடைய வைராக்கியத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டுமே தவிர, நம்மை பலவீனப் படுத்தக் கூடாது.

☆ வறுமை - நம்மையும், நம் அடுத்த தலைமுறையினரையும் வளர விடாமல் வாட்டி வதைக்கும் ஒரு நோய். இந்த நோய்க்கான காரணத்தை ஆராய்ந்து, அதிலிருந்து மீள வழிகளை ஆராய வேண்டும்.



☆ தோல்வி - நாம் எடுக்கும் முயற்சிகளில், சில தோல்வியடையலாம். ஆனால், நாம் வாழ்க்கையில் வெற்றி பெற்றோமா என்பதில்தான், கவனம் இருக்க வேண்டும்.

☆ நாம் வளர்ந்த சூழ்நிலை - இது முடியும், இது முடியாது என்று சொல்லி வளர்க்கப்படும் போது, சிலருக்குத் திறமையும், தகுதியும் இருந்தும், முயற்சி செய்யாமல் இருந்து விடுகின்றனர்.


நம்முடைய வளர்ச்சியைத் தீர்மானிப்பது - தன்னம்பிக்கை:

நம்மைச் சுற்றியுள்ள உலகம் நம்மை ஏளனப்படுத்தலாம், உதாசீனப்படுத்தலாம், நம் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடலாம், நம்மைப் பலவீனப்படுத்தலாம், நமக்கு உதவிக் கரம் நீட்டத் தயங்கலாம், நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய சன்மானம், பாராட்டு, அங்கீகாரத்தைக் கொடுக்க மறுக்கலாம். ஆனால், நம் தன்னம்பிக்கை, ஆசை, கனவு, வைராக்கியம், சுயமரியாதையை யாராலும் தட்டிப் பறிக்க முடியாது.

மனித மூளை அற்புதமானது. நாம் யாராக வேண்டும் என்று திரும்பத் திரும்ப நினைக்கிறோமோ அவராக மாறுவது உறுதி. "நம்மால் இயலாதது" என்றுதான் நமக்கு நாமே எல்லைக் கோட்டைக் கிழித்துக் கொள்கிறோம்.

தன்னம்பிக்கையுடன் இருப்போம். ஒரு பிரகாசமான எதிர்காலம் நம்மை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

தொடரும்....



திருச்சியில் நான் குடியிருந்த குமரன் நகரில் சந்திர ஹாசனின் வீடு. சந்திர ஹாசன் எப்போதும் நடந்து போவதை அங்குள்ள எல்லோரும் பார்க்க முடியும். கமல் ஹாசனின் இரண்டாவது அண்ணன். சின்ன அண்ணா.

# சந்திர ஹாசன்

எப்போதும் இவர் நடந்து போவதைத் தான் பார்த்திருக்கிறேன். காரில் போகும்போது பார்த்ததே இல்லை. நடை.. நடை.... நடை.....

நான் அவருக்கு ஒரு நமஸ்காரம் சொல்லி எப்போதுமே ஒரு நான்கு வார்த்தை பேசுவேன். சிரித்த முகமாக என் பேச்சை கேட்கும் போது கொஞ்சம் சீரியஸாக அவ்வப்போது மாறும். பின் புன்னகைத்து விட்டு மீண்டும் நடக்க ஆரம்பிப்பார்.

முதல் முறை நான் நமஸ்காரம் சொல்லிவிட்டு அவர் அந்த காலத்தில் நடித்த "கிராமத்து அத்தியாயம்" படம் பற்றி தொட்டு விட்டு பின் அவர் கதாநாயகனாக சுமலதாவுடன் நடிக்க ஆரம்பித்து நின்று போன "ராஜா என்னை மன்னித்து விடு" படத்தை குறிப்பிட்டேன். அவருக்கு ரொம்ப ஆச்சரியம். நின்று போன படத்தை பற்றி கூட குறிப்பிட்டேன் என்பது. "ராஜபார்வை"யில் கூட கமலுக்கு அப்பா ரோலில் தலையை காட்டியிருக்கிறார்.

அடுத்த முறை அவர் நடந்து வரும்போது அவரிடம் பேசிய விஷயம் என்னிடம் ஜெமினி கணேசன் சொன்னது. "கண்களின் வார்த்தைகள் புரியாதோ." பாடல் சூட்டிங்கில் தான் கமலை தூக்கிண்டு அவனோட அண்ணா சந்திரஹாசன் வந்தான். நான் தூக்கி கொஞ்சினேன். சாவித்திரி தூக்கி கொஞ்சினா. ஏ.வி.எம் செட்டியார் பார்த்தார். ஹீரோ, ஹீரோயின் ரெண்டு பேருக்குமே பிடித்து விட்டது. இந்த பையனையே பிள்ளையா நடிக்க போட்டுடலாம் னுட்டார்"

"ஹே ராம்" ரிலீசின் போது அந்த படம் எடுத்ததற்காக அவருக்கு என் பாராட்டை தெரிவித்தேன். அவரும் அந்தப் படத்தின் தயாரிப்பாளர். படத்திலும் கமலுக்கு மகனாக நடித்திருப்பார்.

சுருதியின் அம்மா சரிகா மாடியில் அனு ஹாசனுடன் பேசிகொண்டிருக்கும் போது தான் கை நழுவிய செல்போனை பிடிக்க குனிந்து, நிலை தடுமாறி மேலிருந்து கீழே விழுந்து விட்டார். அது பற்றி அப்போது அவரிடம் கேட்டேன்.

"பிழைத்தது தெய்வாதீனம்"-

கொஞ்ச நாள் கழித்து சரிகா -கமல் பிரிவு விஷயம் அல்லோலகல்லோலப் பட்டபோது அது பற்றி அவரிடம் கேட்டதே இல்லை.

"எப்போதும் நடந்தே போகிறீர்களே?" -ஒரு நாள் கேட்டு விட்டேன். முகம் சீரியசாகி பின் "நான் சாமானியன் தான்" -இது அவர் பதில்.

நான் சொன்னேன் "அப்படி சொன்னால் நான் நம்ப மாட்டேன். "எனக்கு சந்திரஹாசன் அண்ணா தான் ஆதர்சம்" என்று கமலே ரொம்ப வருஷம் முன்னாலே ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்."

மீண்டும் அவர் சீரியஸாக "நான் சாமானியன் தான்" என்றார். இதற்கு நான் சொன்ன பதில் அவர் முகத்தை பிரகாசமாக்கியது.

"ஹாசன் குடும்பம் கபூர் குடும்பம் மாதிரி. இந்த குடும்பத்தில் யாருமே சாமானியர்கள் கிடையாது. எல்லோரும் தனித்துவம் உள்ளவர்கள் தான்."

நான் சொன்னதில் மிகை கிடையாது. அனு ஹாசனும் கூட இப்போது தனி பாணியில் பிரபலம் தானே!




அனு ஹாசன்

சாரு ஹாசன், சுஹாசினி இருவரும் கமல் போல தேசிய விருது வாங்கிவிட்டார்கள்.

திருச்சியை விட்டு திருப்பூர் கிளம்பியதற்கு முதல் நாள் மாலை பிஷப் ஹீபர் கல்லூரி வாயிலருகில் நடந்து வந்துகொண்டிருந்த சந்திரஹாசனை எதிர்கொண்டேன். நமஸ்காரம் சொன்னேன். புன்னகையுடன் நமஸ்காரம் என்றார். ஊரை விட்டே கிளம்புகிறேன் என்பதை ஏனோ சொல்லவேண்டும் என்று எனக்கு தோன்றவில்லை. மனசு லேசாக கனத்தது. இனி இவரை எங்கே பார்க்க போகிறேன். திருப்பூரில் செக்கு மாடாக போகிறேன். தொடர்ந்து நான் மேலே நடந்தேன். அவரும் எதிர் திசையில் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தார்.

- R.P. ராஜநாயஹம் -

# ரோஜா - கலை!



வீட்டில் ரோஜாச் செடி வளர்க்கிறீர்களா? ரோஜா மீது அதிக கவனம் செலுத்துங்கள். காரணம் - ரோஜா செடி வளர்ப்பது ஒரு கலை. அதற்கான சில யோசனைகள்:

✘ ரோஜாச் செடியின் இருப்பிடத்தை அடிக்கடி மாற்றக் கூடாது.

✘ உச்சி வெயிலில் ரோஜாச் செடி இருக்கக் கூடாது.

✘ காலை- மாலை இரண்டு வேளையும் ரோஜாச் செடிகளுக்கு அவசியம் தண்ணீர்விடுங்கள்.

✘ மதிய வேளையில். கண்டிப்பாக தண்ணீர் ஊற்றக்கூடாது.

✘ ரோஜாச் செடியின் அகலம் 70 செ.மீ. இருக்க வேண்டும்.

✘ தொட்டியில் சிறுசிறு துளைகள் போட்ட பின் மணல் நிரப்பி ரோஜாச் செடியை வையுங்கள்.

✘ ரோஜாச் செடிகளின் மேல் தண்ணீர் ஊற்றக்கூடாது. எல்லாத் தண்ணீரிலும் சிறிது உப்பு இருக்கும். அதுபடிந்து இலைகளின் சுவாசத் துளைகளை அடைத்தால் நாளடைவில் செடி பட்டுப்போகும்.

✘ முட்டை ஓடு, பயன்படுத்திய தேயிலை, பூண்டு, வெங்காயச் சருகுகள் போடலாம் நல்ல பலன் கிடைக்கும்.

✘ ரோஜாச் செடி நிறையப் பூக்கள் பூக்க பீட்ரூட்டின் தோலையும், வேக வைத்த உருளைக்கிழங்கின் தோலையும் உரமாகப் போட வேண்டும்.

✘ ரோஜாச் செடிகளுக்குப் பக்கம் எறும்பு புற்று இருந்தால் அதில் சிறிது பெருங்காயத் தூளை தூவினால் போதும்.




# யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்

## எமது பாடசாலை பற்றி...

இலங்கைத் தீவின் சிரசென விளங்கும் யாழ். குடா நாட்டிலே தென்மராட்சி பிரதேச பிரிவிலுள்ள சாவகச்சேரியை அலங்கரிப்பதே 'கைதடி' எனும் வளமிகு நல்ல ஊராகும். வந்தோரை வரவேற்று வாழவைக்கும் இவ்வூரானது பழமையும் புதுமையும் நிறைந்து பயிர்செய் நிலமும், தென்னஞ்சோலைகளும், பனைபடுதிரவியமும் ஒருங்கே நிறைந்து, சைவப்பாரம்பரியங்களில் மேன்மையுற்ற கற்றோரைத் தன்னகத்தே கொண்ட வளபூமியாக விளங்குகின்றது. இக்கிராமமானது பழமை வாய்ந்த பண்பியல்புகளும் தழைத்தோங்கும் சைவநெறியும் ஒருங்கே காணப்படுவதற்குக் காரணமாக அமைந்தது. ஆரம்பத்தில் இக்கிராமத்தில் உருவான 'ஐயர் பாடசாலை' என்றழைக்கப்பட்ட பாடசாலையே இன்றைய 'முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்' ஆகும். நூற்றாண்டில் கால் பதித்துள்ள இப்பாடசாலை வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், திணைக்களத் தலைவர்கள், வழக்கறிஞர், அதிபர், ஆசிரியர், அரச ஊழியர்,. நிறுவன உரிமையாளர், அந்தணர், விவசாயிகள், வியாபாரிகள், கலைஞரெனப் பலரை உருவாக்கியுள்ளது.



அந்நியர் ஆட்சிக் காலத்தில் பாடசாலைகள் சமய அடிப்படையில் இயங்கியதால், சைவமாணவர்களுக்கு மிஷனரிகள் கிறிஸ்தவப் பின்னணியில் போதனைகளை மேற்கொண்டன. இதனால் சைவ ஏழைக்குழந்தைகள் மதம் மாறிக் கல்வியைத் தொடரும் அபாயம் ஏற்பட்டது. சைவமும் தமிழும் ஆதரிக்கப்படாது நலிந்து தேய்வுறும் அபாயம் ஏற்பட்டது. நல்லை நகரில் நாவலர் பெருமான் தோன்றிச் சைவமும் தமிழும் வளர்க்க அரும்பாடுபட்டார். கைதடியிலேயும் கிறிஸ்தவ மிஷனரிகளால் C.C-I என்று அழைக்கப்பட்ட தற்போதுள்ள கலைவாணி வித்தியாசாலை, C.C-2 என்று அழைக்கப்பட்ட தற்போதுள்ள சேதுகாவலர் வித்தியாசாலை, பின்னர் ஆரம்பிக்கப்பட்ட C.M.S ஆங்கில பாடசாலை (இது பின்னர் கைதடி மகாவித்தியாலயமாக இயங்கி, 1983 ஆம் ஆண்டு எமது பாடசாலையுடன் இணைக்கப்பட்டது.) ஆகியன கிறிஸ்தவப் பாடசாலைகளாக இயங்கிய சூழ்நிலையில், கைதடிச் சைவ மக்களுக்கோர் பாடசாலை வேண்டும் என்ற உணர்வு மக்கள் உள்ளத்திலே முளைவிட்டன. முதன்முதலில் இவ்வரிய சீரிய எண்ணம் இணுங்கித் தோட்டக் கந்தசுவாமி ஆலய பிரதம குருக்களான பிரம்மஸ்ரீ இ. குருசாமிக்குருக்கள் உள்ளத்திலே முகிழ்த்ததன் பயனாக, 1910 ஆம் ஆண்டு இப்பாடசாலையை ஸ்தாபித்தார்.




பாண்ட் வாத்திய அணி


இப்பாடசாலை ஆரம்பித்த மாதம், திகதிக்குரிய ஆதாரம் கிடைக்கவில்லைஎனினும், கல்வி அதிகாரிகளின் கருத்துப்படி எமது பாடசாலை வருடாந்த விபரத்திரட்டு (ARR) ஒக்ரோபர் 1 - செப்ரெம்பர் 30 வரை கணக்கெடுக்கப்படுவதால், எமது பாடசாலை 10.10.1910 ஆரம்பித்திருக்கலாமெனப் பாடசாலைச் சமூகத்தினால் தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு, நிறுவனர் பற்றி முழுவிபரமும் எம்மால் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்பதனாலும், ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் 10 ஆம் திகதியே எமது 'நிறுவனர் தினமும் ஆண்டு விழாவும்' கொண்டாடுவதென முடிவெடுக்கப்பட்டது இங்கு குறிப்பிடக்கூடியதாகும்.



சாரணர் அணி



மாணவ முதல்வர் குழு



### அதிபர்
### திரு.எஸ். பவளகுமாரன்

2003இல் ஆசிரியராக இடம்மாற்றம் பெற்று வந்த இவர், 21.06.2006 இல் அதிபராகப் பொறுப்பேற்று அரும்பணியாற்றினார். இவருடைய காலத்தில் 2007இல் பெருவிளையாட்டுத்துறை மீண்டும் வளர்ச்சியடையத் தொடங்கியது. பூப்பந்து விளையாட்டு முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இவருடைய காலத்தில் பாடசாலை தனக்கென பல்வேறு வெற்றிகளைப் பெற்றுக் கொண்டது. நவீன கற்றலுக்கு ஏதுவாக கணனி கற்கை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலை மாணவர்களின் கற்கை நெறியில் மட்டுமன்றி, சகல இணைப் பாடவிதானங்களிலும் கவனம் செலுத்தினார். மாணவர்களின் சமய, சமூக, பழக்க வழக்கங்களிலும் முன்னின்று கவனம் செலுத்தினார். தென்மராட்சியில் தன்நலனைப் பாராது பாடசாலைக்கும் சமூகத்திற்குமென உழைத்து அரும்பாடுபடும் அதிபர்களில் இவரும் ஒருவர் ஆவர். இவருடைய சேவை மென்மேலும் மாணவர் சமூகத்துக்கு கிடைக்க இறைவனைப் பிரார்த்திப்போம்.

# திணைக்களங்களின் நிதிநிலை வடமாகாண ஆளுநர் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

வட மாகாண திணைக்களங்களின் நிதிநிலை முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் வட மாகாண ஆளுநர் ஜி ஏ.சந்திரசிறி தலைமையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இவ்வாண்டு விடுவிக்கப்பட வேண்டிய எஞ்சிய நிதிகளை விடுவிப்பது தொடர்பாக ஆளுநரினால் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. மேலும் இவ்வாண்டுக்கான ஒதுக்கீடுகளுக்கான செயற்திட்டங்களை துரிதப்படுத்துமாறும் அவற்றின் நிதி விடயங்களை மேற்பார்வை செய்யுமாறும் அடுத்த ஆண்டுக்கான திட்ட முன்வரைபுகளை உரிய நிதி வழங்கும் நிறுவனங்களின் விபரங்களுடன் துறை ரீதியாகச் சமர்ப்பிக்குமாறும் திணைக்களத் தலைவர்களை ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், அமைச்சுக்களின் செயலாளர்கள். பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், கணக்காளர்கள் ஆகியோர் இதில் கலந்து கொணடனர்.

# சர்வதேச ஒலிம்பியாட் தேர்வு மன்னார் மாணவன் சாதனை



(மன்னார்)

சர்வதேச ரீதியில் நடைபெற்ற 9ஆவது சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவன் செல்வன் து. யூட் மிதுஷன் பிகிராடோ வெண்கலப்பதக்கம் வென்றார்.

இலங்கை , இந்தியா, சீனா, இந்தோனேசியா, ஈரான், மலேசியா, நேபாளம், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தென்ஆபிரிக்கா, கொரியா, தாய்வான் போன்ற நாடுகளுக்கிடையில் சர்வதேச ரீதியில் நடைபெறும் ஒலிம்பியாட் போட்டியின் 9வது சர்வதேசப்போட்டியானது கடந்த ஒக்ரோபர் 29 தொடக்கம் நவம்பர் 1ஆம் திகதிவரை இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெற்றது. இலங்கையைப் பிரதிநிதித்து வப்படுத்தி இப் போட்டியில் பங்குபற்றிய செல்வன் மிதுஷன் பிகிராடோ இதில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

இவர் மாகாணமட்டத்தில் நடைபெற்ற ஒலிம்பியாட் போட்டியில் வடமாகாணத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவானார். தேசிய மட்டப் போட்டியில் 8ஆம் இடத்தைப் பெற்று சர்வதேச போடடிக்குத் தெரிவான இவர் சர்வே தேசப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பள்ளிமுனையைச் சேர்ந்த ஜெனிங்ஸ் பிகிராடோ, அந்தோனிக்கம் ஆகியோரின் மகனான செல்வன் யூட் மிதுஷனையும் இவரின் பெற்றோரான ஜெனிங்ஸ் பிகிராடோ, அந்தோனிக்கம் ஆகியோரையும் இவரை தயார் செய்த ஆசிரியர்களையும் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரிச் சமூகத்தையும் இவருக்கு ஊக்கமளித்த மன்னார் வலய விஞ்ஞானபாட உதவிக்கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர் ஆகியோரையும் மன்னார் கல்வி வலயத்தினர் பாராட்டியுள்ளனர்.

# இந்து ஆலயங்கள் புனரமைப்பு; ஒரு இலட்சம் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்து ஆலயங்களின் புனரமைப்புக்கென புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் யாழ்மாவட்டத்தில்72 ஆலயங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாவீதம்72 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, திணைக்களப் பணிபபாளர் சாந்தி நாவுக்கரசன் தெரிவித்தார்.

ஆலயங்களின் விபரம் வருமாறு,

வேலணை வங்களாவடி முருகன் கோயில், மூளாய் வத்திரான் புலோ சித்தி விநாயகர் ஆலயம், சாவகச்சேரி ஆத்தாய் முத்துமாரியம்மன் ஆலயம், யாழ். கடுக்கையம்பதி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம், நீர்வேலி செல்லக்கதிர்காம ஆலயம், மல்லாகம், பாலம்பதி ஆலயம், கரவெட்டி புளியங்கியான் விநாயகர் ஆலயம், சாவகச்சேரி ஸ்ரீ நாராயணர் ஆலயம், தெல்லிப்பளை ஸ்ரீராஜ ராஜேஸ்வரி ஆலயம், வேலணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், அச்சுவேலி வளவை பிள்ளையார் ஆலயம், கரவெட்டி கொற்றாவத்தை செட்டித்தாரை சித்தி விநாயகர் ஆலயம், ஊரெழு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் ஆகிய கோயில்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அளவெட்டி ஞானவைரவர் ஆலயம், அச்சுவேலி போதி பிள்ளையார் ஆலயம், தெல்லிப்பளை ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரர் சுவாமி திருக்கை ஆலயம், வேலணை வசந்தநாகபூசணி அம்பாள் ஆலயம் ஆகிய ஆலயங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நாவலடி சக்தி அம்மன் ஆலயம், சாவகச்சேரி கற்குளி கந்தசுவாமி ஆலயம், மானிப்பாய் ஸ்ரீ நாக ராஜேஸ்வரி அம்மன் ஆலயம், பருத்தித்துறை பண்ணையம்பதி வீரகத்தி விநாயகர் ஆலயம், மிருசுவில் தரவையம்பதி நாச்சிமார் ஆலயம், சண்டிலிப்பாய் ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம், புங்குடுதீவு சிவன் ஆலயம், தெல்லிப்பளை ஸ்ரீ காளி அம்பாள் ஆலயம், வட்டுக்கோட்டை வட்டூர் ஞான வைரவர் ஆல. யம், அச்சுவேலி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் ஆகிய கோயில்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(முற்றும்)

# பதிவிறக்கப் பெட்டகம்

தீர்வுத் திட்டத்திற்கு எதிராக கல்லெறிபவர்கள் இதுபற்றி புரிந்துகொள்ள முடியாதவர்களே. இந்த நிலைக்கு சுதந்திரக் கட்சியும் பொறுப்புக் கூற வேண்டும். மாகாண சபைகளைக் கொண்டுவந்த வேளையில், நாமும் சென்று அரச மரங்களின் கீழ் அமர்ந்து "நாட்டைப் பிரிக்கின்றனர்" என கோஷமிட்டோம். எதிர்க்கட்சியில் இருக்கும் போது உண்மையில் இவை விளங்குவதில்லை. கோஷமிடுவதற்கு மட்டுமே தெரிகின்றது. அன்று நாம் வழிநடத்திய மக்களே இன்று இந்தத் தீர்வுக்கு எதிராகி உள்ளனர்.

**– 30-09-1995 வீரகேசரியில் அமைச்சர் கிங்ஸ்லி விக்ரமரத்ன**

புலிகளைத் தோற்கடிப்பதல்ல, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்பதே முக்கியம். தீர்வுத்திட்டத்தை தெற்கில் சுலோகங்கள் கொண்டும் பதாகைகள் கொண்டும் வெறுப்பதால் பிரயோசனம் ஒன்றும் இல்லை. அதற்கு மாற்றீடான ஆலோசனையையும் முன்வைக்க வேண்டும்.

**– 1995-ல் அமைச்சர் அமரசிறி தொடங்கொட**

இனப்பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினை என்று கூறி சிறுமைப்படுத்தக் கூடாது. இனப்பிரச்சினையின் விளைவாகத்தான் பயங்கரவாதப் பிரச்சினை தோன்றியது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். தொடர்ச்சியாக பதவிக்கு வந்த அரசாங்கங்கள் கடைப்பிடித்த கொள்கைகள் காரணமாகவே பயங்கரவாதப் பிரச்சினை உருவாகியது. இன்றைய பாரதூரமான நிலைக்கு நாம் இருதரப்பினருமே பொறுப்பு.

**– 18-11-95 நாடாளுமன்றத்தில் ஸ்டான்லி திலகரத்ன எம்.பி.**

சிங்கள இராணுவத்தால் தமிழ் மக்கள் கொலை செய்யப்படுவதற்கு எதிராக என்னால் ஆயிரம் சிங்கள மக்களையாவது திரட்டி ஊர்வலம் நடத்த முடியும். ஆனால், தமிழ்ப் புலிகளால் சிங்கள மக்கள் கொலை செய்யப்படுவதற்கு எதிராக பத்து தமிழர்களைக் கூட என்னால் திரட்ட முடியாது.

**– 1995-ல் 'மேர்ஜ்' பாலகிருஷ்ணன்**

முரண்பட்ட அரசியல் கருத்துகளை விடுதலைப் புலிகள் இயக்கம் எப்படி எதிர்கொண்டு வந்துள்ளது? ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத் தலைவர்களின் உயிர்கள் சென்னையில் பறிக்கப்பட்டதே இந்த விளைவுக்குத் தகுந்த பதிலாகும். உலக அரங்கிலும், தெற்கு ஆசியச் சூழலிலும் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் இலங்கை அரங்கிலும் முக்கிய மாறுதல்களை உருவாக்கியுள்ளது. நவீன தளவாடங்களைப் புதிதாகப் பெற்றுள்ள இலங்கை இராணுவத்தின் தாக்குதல் திறனும் வளர்ந்துள்ளது. இந்தப் பின்னணியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போக்கில் மாறுதல் வேண்டும் என்ற சிந்தனையைக் கூட முளையிலேயே கிள்ளும் முயற்சியாகவே மாத்தையா கைது, விசாரணை ஆகியவை அமைந்துள்ளன என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது. சட்டப்படியான நடைமுறை என்ற பிரிட்டிஷ் தந்திரமும், அதற்கு வலுவூட்ட வேற்று நாட்டுப் பொலிஸுடன் கூட்டுச்சதி என்ற தந்திரமும் இன்னும் பல காலம் அரசியல் இயக்கங்களின் உத்தியாக அமையக் கூடும்.

**– ஜனவரி 1994 தினமணிக் கதிரில்**

இது நீதியில்லாத ஒரு சமாதானமாகும் எனினும் சமாதானமின்றி இருப்பதை விட மேலானது.... தொடர்ச்சியான யுத்தத்துக்கு இடமளிக்காமல் இப்படி ஒரு சமாதானம் ஏற்பட்டிருப்பது நியாயமானது என நான் எனது மக்களுக்குக் கூற விரும்புகிறேன். முற்றிலும் சிறந்த முறையில் சமாதானத்தை அடைவது வெறும் கற்பனாரீதியான ஏமாற்றே!

**– பொஸ்னிய ஜனாதிபதி அலிஜா பெகோவிக்**

கருணையுள்ளவர்கள் மோசமான ஆட்சியாளர்கள். அவர்கள் தோற்கடிக்கப்படுகிறார்கள். அகங்காரிகள் மிகச் சிறந்த ஆட்சியாளர்கள். கருணையுள்ள அரசு என்ற ஒன்று இல்லைப் போலும்!

**– பீன்தொடரும் நிழலின் குரல்**

நம் கண் முன்னாலேயே நாம் ஏமாற்றப்படுகிறோம். நமது ஒப்புதலுடனும் ஒத்துழைப்புடனும் ஏமாற்றங்கள் சுமத்தப்படுகின்றன நம் மேல். நிஜங்களை விடவும் கனவுகள் சிறந்தவை என நாலாபுறத்திலுமிருந்து நமக்குச் சொல்லப்படுகிறது. என்றாகிலும், எப்படியாகிலும் பளபளப்பான அந்தக் கனவு வாழ்க்கையினை நாம் எட்டிப் பிடித்துவிட முடியும் என நம்பிக்கையூட்டப்படுகிறோம். இதுதான் வாழ்க்கை என்ற பூச்சுற்றல்களால் நம்மிடமிருந்து வாழ்க்கை பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து ஏமாளிகளாகவே வாழ்ந்து மடிகிறோம்.

**– அமிட்டவ் கோஷ்**

# பட்டதாரி பயிலுனர்களுக்கு 2013இல் நிரந்தரநியமனம்



(கொழும்பு)

தற்போது பயிலுனர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிகள் அனைவரும் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி அளவில் நிரந்த சேவையில் நியமிக்கப்படவுள்ளனர். இதற்குரிய நிதி ஒதுக்கீடுகள் இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் தலைவரும் தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சருமான ரஞ்சித் சியாம்பலபிட்டிய தெரிவித்தார்.

மாவத்தகம தேர்தல் தொகுதியின் சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவத்தகம சாமோதய கேட்போர் கூடத்தில், மாவத்தகம பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மல்லவப்பிடிய பிரதேச செயலாளர் பிரிவுகளிவும், பயிலுனர் பட்டதாரிகளாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட 950 பட்டதாரிகள் மத்தியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

"மகிந்த சிந்தனையில் 51 400 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளன. இது சாதாரண விடயமல்ல இதனை மகிந்த ராஜபக்ஷவின் மூலம் தான் செய்ய முடிந்தது. குருநாகல் மாவட்டத்தில் 6000 பட்டதாரிகளுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையிலேயே கூடுதலான பட்டதாரிகள் இந்த மாவட்டத்தில இருந்தே சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்தப் பட்டதாரிகள் நியமனத்தின் போது கட்சி வேறுபாடுகளும் பார்க்கவில்லை. சுந்திர பட்டதாரிகள் சங்கத்தில் இணைந்து கொள்கின்ற போது ஜனாதிபதிக்கு ஆதரவாகச் செயற்பட்டவரா அல்லது இல்லையா எனப் பார்க்காமல் யாவருக்கும் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகள் என்போர் சாதாரணமானவர்கள் அல்லர். பல்கலைக்கழகம் சென்று நன்கு கற்று வந்தவர்கள். பல்கலைக்கழக வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இந்த நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் உங்களுடைய சேவை கிடைக்கப்பெறவுள்ளன. ஆசியாவில் ஆச்சரியம்மிக்க நாடாக நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு உங்களின் பங்களிப்பு மிக அவசியமானதாகும்" என்றார்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தையும் இரண்டாவது பதவியேற்பையும் நினைவு கூரும் முகமாக 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தேசத்தின் நிழல் மர நடுகைத்திட்டம் நேற்று வேலணை பிரதேச சபைத் தவிசாளரும் ஈ.பி.டி.பி. வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சி.சிவராசாவினால் (போல்)காலை 9:07 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபையின் பிரதம முகாமை உதவியாளர் ஜ.குரச்சந்நிரநாதன் மற்றும் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் கலந்து கொன்டனர்.

# 50வீதமானவர்கள் நீரிழிவால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 50 வீதமானவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாகத் சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தாவிட்டால் 2050ஆம் ஆண்டளவில் நாட்டின் அரைவாசிக்கும் மேற்பட்டோர் நீரிழிவினால் பாதிக்கப்படக் கூடும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவ மாணவியரில் 10 முதல் 15 வீதமானோர் நீரிழிவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். நீரிழிவு தொடர்பான சிகிச்சைகளுக்காக நாள் தோறும் 200 பேர் வைத்தியசாலைகளுக்குச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மதிய உணவில் விசஜந்து நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

(வவுனியா)

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் கொள்வனவு செய்யப்பட்ட மதிய உணவுப் பொதியில் அரணை என்ற விச ஜந்து அவிந்த நிலையில் உள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த உணவை உண்ட நபர் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்துடன் இது தொடர்பாகப் பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, குறித்த வர்த்தக நிலையத்திற்கு எதிராக வவுனியா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில் வர்த்தகரை விளக்கமறியலில் வைக்க உத்திரவிடப்பட்டுள்ளதாக வவுனியா நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். மேற்படி உணவு பார்சல் வாங்கப்பட்ட உணவகத்திற்கு உடனடியாகச் சென்ற நகர சபை மற்றும் வவுனியா வைத்தியசாலை ஆகியவற்றின் சுகாதார பரிசோதகர்கள் கடையினை சோதனையிட்டதுடன் அங்கு சமையலுக்குத் தரமற்ற வகையிலிருந்த பொருட் களை கைப்பற்றியதுடன் சீரான முறையில் சமையல் பகுதி அமையவில்லை என்பத னையும் கருத்தில் கொண்டனர். இந்த உணவுப் பொதியை உட்கொண்டவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

# பிரேத பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் மைத்துனர் சின்னத்துரை விக்னேஸ்வரனின் பிரேத பரிசோதனை அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் புறக்கோட்டை பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு கொழும்பு பிரதம நீதவான் ரஷ்மி சிங்கபுலி முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் மைத்துனர் சின்னத்துரை விக்னேஸ்வரனைக் கொலை செய்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சந்தேக நபரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபரின் 'தொலைபேசி உரையாடல்களை ஆராய்வதற்கு கால அவகாசம் தேவையென பொலிஸார் நீதவானின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். இதனையடுத்தே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.


# கைவிடப்பட்ட ஆலய நிர்மாணப்பணி தம்பனைக்குளம் மக்கள் கவலை

(மன்னார்)

மன்னார், மதவாச்சி பிரதான வீதியிலுள்ள தம்பனைக்குளம் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தின் நிர்மாண்ப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதாக இவ்வாலயத்துக்கு வரும் பக்தர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தம்பனைக்குளம் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய பொருளாளர் வி.செல்வகுமார் தெரிவிக்கையில்,

"மன்னார், மதவாச்சி பிரதான வீதியிலுள்ள தம்பனைக்குளம் பகுதியில் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. தற்காலிகமாகக் காணப்பட்ட இவ்வாலயத்திற்கான நிர்மாணப் பணிகள் கடந்த 5 வருடங்களுக்கு முன் இந்துக்களினதும் நலன் விரும்பிகளினதும் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.



நிதிப்பற்றாக்குறை காரணமாக இவ்வாலயத்தின் நிர்மாணப்பணிகள் தற்போது இடைநடுவில் கைவிடப்பட்டது.

இப்பகுதியைச் சேர்ந்த சுமார் 400 குடும்பங்களைச் சேர்ந்த இந்து மக்கள் இவ்வாலயத்திற்கு வந்துசெல்கின்றனர். இந்நிலையில், தற்போதைய ஆலயத்தினுள் பூஜை வழிபாடுகளின்போது அதிகளவான பக்தர்களை உள்ளடக்க முடியாத நிலையில் ஆலய நிர்வாகத்தினர் உள்ளனர். 5 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயத்திற்கான நிர்மாணப் பணிகள் நிதிப்பற்றாக்குறை காரணமாக கைவிடப்பட்டுள்ளமை தொடர்பில் ஆலய நிர்வாக சபையினர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

# வீதி மின் விளக்குகள் பராமரிப்பு மின்சாரசபையிடம் கையளிப்பு

(மன்னார்)

மன்னார் நகர சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து தெரு மின் விளக்குகளையும் பராமரிக்கும் பணி இலங்கை மின்சார சபையிடம் விரைவில் கையளிக்கப்படவுள்ளது என மன்னார் நகர.சபையின் உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் சுமார் 600 இற்கும் மேற்பட்ட தெரு மின் விளக்குகள் காணப்படுகின்றன. குறித்த் மின் விளக்குகளில் சுமார் 400 மின் விளக்குள் அண்மையில் பொருத்தப்பட்ட நவீன ரக விளக்குகளாகும் என அவர் குறிப்பிட்டார். இந்த மின் விளக்குகள் நன்கு பராமரிக்கப்பட்டு பொது மக்களுக்கு அதி உன்னத பயனைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடனேயே மின்சார சபையிடம் தெரு மின் விளக்குகளை பராமரிக்கும் பொறுப்பு வழங்கவுள்ளது என அவர் தெரிவித்தார்.

# மகளுக்கு மது பருக்கிய பெற்றோர் கைதாகினர்

(கொழும்பு)

தாங்களும் மதுவை அருந்திவிட்டு போதை தலைக்கேறியதன் பின்னர் தங்களுடைய ஒரேயொரு மகளுக்கும் மதுவைப் பருக்கிய பெற்றோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட சம்பவமொன்று களுத்துறையில் இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலையில் பணியாற்றுகின்ற குறித்த சிறுமியின் தந்தை தனது மனைவியுடன் இணைந்து மது அருந்தியுள்ளார்.

இளம் தம்பதியினரான அவ்விருவரும் மது அருந்திவிட்டு போதை தலைக்கேறியதைத் தொடர்ந்து தங்களுடைய ஒரேயொரு மகளான ஒன்பது வயது மகளுக்கும் மதுவைப் பலவந்தமாகப் பருக்கியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மத்துகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து குறித்த பெற்றோரைக் கைது செய்த பொலிஸார் அவ்விருவரையும் மத்துகம நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தினர். பெற்றோரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் தமிந்த ராமநாயக்க வெலிகொடபிட்டிய ஒன்பது வயதுச் சிறுமியைச் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்குமாறு பணித்தார்.

06) பின்வரும் ஒவ்வொரு வினாவினதும் சரியான விடையைத் தெரிவு செய்க.

01. திடீர் என ஏற்பட்ட தீயை அணைக்க என்ன செய்ய வேண்டும்?
   1. நீரை ஊற்ற வேண்டும்   2. சாக்குகள் போட்டு மூடவேண்டும்.
   3. தீ ஏற்பட்டதற்கான காரணத்தை இனங்கண்டு அதை அகற்ற வேண்டும்.

02. நீருக்கு குளோரின் கலக்கக் காரணம்
   1. அதன் சுவையை அதிகரிப்பதற்காக   2. நீரைச் சுத்தப்படுத்துவதற்காக
   3. நீரின் பாரத்தை அதிகரிப்பதற்காக

03. மேலே எறியும் பொருள் ஒன்று கீழே விழக்காரணம்
   1. பொருளின் பாரத்தினால்   2. புவியீர்ப்பினால்
   3. வேறு இடமில்லாததால்

**07) பின்வரும் பந்தியை வாசித்து அடிக்கோடிட்ட சொல்லுக்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

நான் அரசனானதில் பயம் ஒன்றுமில்லை போலிருக்கிறது. எனக்கு வேண்டிய உணவு உண்பதற்கும் வழியில்லை. அதையும் திருட்டுத் தனமாகத்தான் செய்ய வேண்டியுள்ளது. அமைச்சர்கள் பார்த்துக் கொண்டே இருக்கின்றனர். அவர்களுக்கும் வேறுவழியில்லை.

1. வேண்டிய :................................................ (தேவையான, திருடிய)
2. திருட்டுத் :................................................ (விரும்பியவாறு, களவாக)
3. பார்த்துக் :................................................ (தேடிப்பார்த்தல், ஒட்டுப்பார்த்தல்)

**08) எனக்குத் தாராளமாகக் கிடைத்தாலும், மனதில் நிம்மதி இல்லை. என்னை நன்கு கவனித்தாலும் தனிமையில் கழிக்கும் இவ்வாழ்க்கையில் என்ன நன்மை. சில வேளைகளில் என்னை அறியாமலேயே பறந்து செல்ல முயற்சி செய்கிறேன்.**

01. மேற்கூறிய பந்திக்கிணங்க கூட்டில் அடைக்கப்பட்டிருப்பது,
   1. குற்றவாளி ஒருவன்   2. பறவை ஒன்று   3. நாய் ஒன்று

02. பறந்து செல்லத் தேவையானது,
   1. சிறகு   2. இறகு   3. கூடு

03. பின்வருவனவற்றுள் முலையூட்டி ஒன்று.
   1. கழுகு   2. பூனை   3. முதலை

04. நன்மை என்பதற்குரிய எதிர்ச்சொல்
   1. நன்கு   2. நன்று   3. தீமை

05. பந்தியில் உள்ள உலோகப் பொருள்
   1. இரும்பு   2. உணவு   3. நிம்மதி





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II
1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

வெளியீடு 11



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

01) இப்பந்தியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி நாட்டைவிட்டுச் சென்ற சலீம் 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதிதான் நாடு திரும்பினான். இக்காலப் பகுதியில் தனது கிராமத்தில் ஏற்பட்டிருந்த மாற்றங்களைக் கண்ட அவன் வியப்பில் ஆழ்ந்தான். கிராமத்தில் வீதிகள் திருத்தப்பட்டு அகலமாக் கப்பட்டிருந்தன. சகல வீதிகளும் மின் விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அழகான பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. சிறிய கடைகள் திருத்தப்பட்டு பல மாடிக்கட்டடங்களாக மாறியிருந்தன. மொத்தத்தில் அவனது சிறிய கிராமம் ஒரு சிறிய நகரமாக மாறியிருந்ததைக் கண்ட அவன் மிகவும் மகிழ்ச்சியுற்றான்.

01. சலீம் எவ்வளவு காலத்திற்குப் பின் நாடு திரும்பினான்?
..................வருட..................மாதம..................நாள..................

02. கிராமத்தில் அவன் கண்ட மாற்றம் ஒன்றை எழுதுக.
..................................................

03. ஒரு வருடத்தின் நாலாவது மாதத்தின் பெயரை எழுதுக.
..................................................

04 வருடமொன்றில் எத்தனை மாதங்களில் 30 நாட்கள் இருக்கின்றன?
..................................................

05. வீதி என்ற சொல்லுக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய இன்னுமொரு சொல்லை எழுதுக.
..................................................

06. அன்று என்பதற்கு எதிர்க்கருத்து என்ன?
..................................................

07. ஜனவரி என்னும் மாதத்தின் தமிழ்ப் பெயர் என்ன?
..................................................


08. பொருத்தப்பட்டிருந்தன என்பது என்ன காலம்?
..................................................

09. 2005, 2006, 2007, 2008 ஆகிய ஆண்டுகளில் எவ்வாண்டு நெட்டாண்டாகும்?
..................................................

10. படி என்பதை வினையாகவும், பெயராகவும் வருமாறு ஒவ்வொரு வசனங்கள் எழுதுக.
   1. பெயராக
   2. வினையாக

11. சலீம் எத்தனை, எமது நாட்டின் சுதந்திர நாள் கொண்டாட்டங்களின்போது நாட்டில் இருக்கவில்லை?
..................................................

12. எமது நாட்டுக்கு எப்போது சுதந்திரம் கிடைத்தது?
..................................................

13.  இதன் பெயர் என்ன?..................................................

14. இதன் எப்பகுதியினால் ஒலி உண்டாகின்றது? ..................................................

15. பின்வருவனவற்றிற்கு ஒத்தசொல் தருக.
   1. ஆண்டு : ..................................................

**02) பின்வருவனவற்றின் ஆங்கிலச் சொல்லைத் தமிழிலும் சிங்களச் சொல்லைத் தமிழிலும் தருக**

01. Good night :..................................
02. Happy birthday :..................................
03. Silence please :..................................
04. I am sorry :..................................
05. Hands down :..................................

01. ஸ்தூதி :..................................
02. நகிடின்ன :..................................
03. தென்ன :..................................
04. பனிட்டுவ :..................................
05. மகே :..................................

**03) பின்வரும் ஒவ்வொரு வினாவினதும் சரியான விடையைத் தெரிவு செய்க.**

01. தன்வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே பலன்தரும் தாவரம்
   1. கமுகு 2. வாழை 3. கத்தரி

02. நீரினால் பரவும் தாவரம்
   1. வேம்பு 2. மா 3. தென்னை

03. உமது வகுப்பில் ஒரு மாணவர் திடீரென மயங்கி விழுந்தால்
   1. அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வேன்
   2. அவருக்கு உடனடியாக தேநீர் கொடுப்பேன்
   3. நல்ல காற்றோட்டமான இடத்தில் படுக்க வைப்பேன்

04. நுளம்புகள் பரவுவதைத் தடுக்க.
   1. நுளம்புத் திரிகளைப் பற்ற வைத்தல் 2. நுளம்பு வலைகளைப் பயன்படுத்தல்
   3. நீர் தேங்கியிருக்கும் இடங்களில் உள்ள நீரை அகற்றுதல்

05. தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்குப் பின்வருவனவற்றுள் எவ்வெழுத்தை இட்டால் கருத்துள்ள மூன்று சொற்களைப் பெறலாம்.

| | | |
|---|---|---|
| ம | தி | த |
| ற | க | கு |
| .......... | .......... | .......... |

1. ம
2. தி
3. சி

**04) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. சகல மனிதர்களுக்கும் நீர் அவசியம். எனினும் நகரவாசிகள் கிணற்று நீரை அருந்த மாட்டார்கள்.
   1. நகர வாசிகள் நீரை அருந்தமாட்டார்கள்
   2. நகர வாசிகளுக்கு கிணற்று நீர் கிடைக்காது
   3. நகர வாசிகள் கிணற்று நீரை அறியமாட்டார்கள்

02. பழச்சாறு போத்தல் ஒன்றில் 750 ml பானம் உள்ளது. விருந்துபசாரம் ஒன்றில் அவ்வாறான 10 போத்தல்கள் பயன்படுத்தப்பட்டன. பயன்படுத்தப்பட்ட மொத்த பானத்தின் அளவு.
   1. 7.5 l 2. 750 l 3. 7.5 ml

03. 50 சதத்தை ரூபாயின் தசமமாகக் கூறின்
   1. 0.50 2. 0.050 3. 1.50 1. 536



04. ஒரே அளவான இரண்டு பனிக்கட்டிகளை ஒன்றின் மீது ஒன்றை வைத்தால் அவதானிக்க முடியாதது.
   1. இரண்டும் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்ளுதல்
   2. இரண்டும் மெதுமெதுவாக உருகும்
   3. அவற்றின் வெப்பநிலை சிறிது சிறிதாகக் குறையும்

05. 
இவ்வுபகரணத்தின் பயன்பாடு
   1. கழற்றுதல் 2. துளையிடல் 3. அடித்தல்

06. இலங்கையில் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு வழங்கும் சான்றிதழ்
   1. CFL 2. SLS 3. LEB


07. மாமரம் தொடர்பான கூற்று
   1. பரந்து வளரும் 2. கனிகொடாது 3. நார்வேருடையது

08. கடலாமை தன் முட்டைகளை
   1. தரையிலிடும் 2. கடலிலிடும் 3. கடற்கரையிலிடும்

**05) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01. 205 பிள்ளைகள் சுற்றுலா ஒன்றுக்கு ஆயத்தமானார்கள். இதற்காக 5 பேருந்து ஒழுங்கு செய்யப்பட்டதுடன் சகல - பேருந்துகளிலும் சம எண்ணிக்கையான மாணவர்கள் ஒழுங்குபடுத்தப்பட்டனர் எனில் ஒரு பேருந்தில் எத்தனை மாணவர்கள் ஏற்றப்பட்டனர்?

..............................................................................................




02. மூன்று பொருட்களின் விற்பனை தொடர்பான வரைபுகள் மூன்று மேலே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாளும் ஒரே அளவில் விற்கப்பட்ட பொருள் எது?

..............................................................................................

03. 5 ரூபா நாணயங்கள் 5 உம், 2 ரூபா நாணயங்கள் 5 உம், 10 ரூபா நாணயங்கள் 5 உம், 50 சத நாணயங்கள் 5 உம் சேர்ந்தால் மொத்தத் தொகை யாது?


..............................................................................................

04. **சுருக்குக.** 1/2 - 1/4 =.................................... 5. 0.52+3.4 - 1.22 =....................................

06. பெரிய பாத்திரம் ஒன்றை நிரப்ப 205 லீற்றர் கொள்ளளவுள்ள சிறிய பாத்திரம் ஒன்றினால் நான்கு முறை ஊற்ற வேண்டுமானால் பெரிய பாத்திரத்தின் கொள்ளளவு யாது?

..............................................................................................

07. வடதிசையாக பயணித்துக் கொண்டிருந்த பேருந்து ஒன்று வலப்பக்கமாக 90 பாகை திரும்பிச் சென்று கொண்டிருக்குமாயின் அது தற்போது எத்திசையை நோக்கிப் போகிறது?



படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரே அளவுள்ள சில கனவுருக்கள் ஒன்றின் மீது ஒன்று வைக்கப்பட்டுள்ளன.
   1. இதில் கனவுவொன்றின் நீளம் 30 செ.மீ எனில் இவ்வமைப்பின் மொத்த உயரம் யாது?
   ..............................................................................................
   2. இவ்வமைப்பின் கீழ் இன்னுமொரு வரிசை கனவுருக்கள் வைக்கப்பட வேண்டுமாயின் இன்னும் எத்தனை கனவுருக்கள் தேவை?....................................

### டில்லியில் தாக்குதல் அச்சம்

# முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு அதிகரிப்பு

டில்லியில் தாக்குதல் நடத்த இந்தியன முஜாகிதீன் பயங்கர வாத இயகம் சதித் திட்டம் தீட்டியுள்ளதாக றோ உளவுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

முக்கிய பிரமுகர்களைக் குறிவைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என உளவுத் தகவல் கிடைத்துள்ளதால் பிரதமர் மன்மோகன் சிங், சோனியா காந்தி, அத்வானி உள்ளிட்ட முக்கிய தலைவர்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து மத்திய உட்துறை அதிகாரி ஒருவர் கூறியது, டில்லியில் நவம்பர் மாதத்தில் இந்தியன் முஜாகிதீன் பயங்கரவாத இயக்கம் தாக்குதல் நடத்தக் கூடும் என்று சவூதி அரேபியாவில் இருந்து இந்திய உளவுத்துறைக்கு மர்ம தொலைபேசி அழைப்பு கடந்த சில நாள்களுக்கு முன்பு வந்தது. அதையடுத்து டில்லி பயங்கரவாத தடுப்புப் படை அதிகாரிகள் குழுவும் இந்திய உளவுத்துறை அதிகாரிகளும் சவூதி அரேபியா சென்று தொலைபேசியில் பேசிய நபரைக் கண்டு பிடித்து விசாரித்தனர்.

அதைத் தொடர்ந்து இந்தி யாவுக்குள் கடந்த சில மாதங்களில் ஊடுருவிக் கைது செய்யப்பட்ட இந்தியன் முஜாகி தீன்களிடமும் விசாரணை நடத்தப்பட்டது. அதில், பிகாரில் பதுங்கியுள்ள இந்தியன் முஜாகி தீன்கள் மூலம் தலை நகரில் தாக்குதல் நடத்த சவூதியில் உள்ள அந்த இயக்கம் உத்தரவிட்டுள்ளதாகத் தெரியவந்தது.

டில்லியின் முக்கிய இடங்கள் மட்டுமினறி முக்கிய பிரமுகர்களையும் பயங்கர வாதிகள் இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தக் கூடும் என்று தகவல் கிடைத்துள்ளது. அதனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக டில்லியில் பாதுகாப்பை அதிகரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

முக்கிய பிரமுகர்களைக் குறி வைத்துத் தாக்குதல் நடத்த வாய்ப்பிருப்பதால், தேசிய பாதுகாப்புப் படை மற்றும் சிறப்புப் பாதுகாப்புக் குழுவின் பாதுகாப்பைப் பெற்றுள்ள பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பா.ஜ.க. மூத்த தலைவர் எல்.கே. அத்வானி, குஜராத் முதல்வர் நரேந்திர மோடி, ஹரியாணா முதல்வர் பூபிந்தர் சிங் ஹுடா, உத்தரப் பிரதேச முதல்வர் அகிலேஷ் யாதவ், பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி உள்ளிட்ட தலைவர்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று அந்த அதிகாரி கூறினார்.

## ஆறு கோடி மக்கள் நீரிழிவால் பாதிப்பு

(துபாய்)

இந்தியாவில், ஆறு கோடி பேர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. நீரிழிவைக் கட்டுப்படுத்தும் இன்சுலின் மருந்தைக் கண்டுபிடித்த, ப்ரெரிக் பேன்டிங் மற்றும் சார்லஸ் பெஸ்ட் ஆகியோரது பிறந்த நாள் நேற்று கொண்டாடப்பட்டது. இவர்களது பிறந்த நாள் சர்வதேச "நீரிழிவு தினம்" ஆக, அனுசரிக்கப்படுகிறது. இதை யொட்டி, உலகம் முழுவதும் நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடந்தன.

உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, உலகம் முழுவதும் 35 கோடி பேர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக இந்தியாவில் ஆறு கோடி பேரும், சீனாவில் 4.5 கோடி பேரும், அமெரிக்காவில் மூன்று கோடி பேரும், ரஷ்யாவில் ஒரு கோடி பேரும், பிரேசில் நாட்டில் 75 இலட்சம் பேரும் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். வரும், 2030 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரிக்கும் அபாயம் உள்ளது. எனவே, நீரிழிவைக் கட்டுப்படுத்துவது குறித்த விழிப்புணர்வு அவசியமாகிறது.

# பாரதிய ஜனதாவில் இணைந்தார் நமீதா



(சென்னை)

தென்னிந்திய மொழி படகை நமீதா பாரதிய ஜனதா கட்சியில் இணைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

நடிகை நமீதா காங்கிரஸில் இணையப்போவதாக செய்திகள் வலம் வந்தாலும் தற்போது அவர் பா.ஜ.க.வில் இணைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து எதிர் வரும் 2014 நாடாளுமன்றத் தேர்தலில் அவர் பா.ஜ.க.வுக்காக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

குஜராத்தை சொந்த மாநிலமாக கொண்ட நமீதா, தென்னிந்திய மொழிப்படங்களில் பரபரப்பாக நடித்தவர்.

தற்போது சற்று பட வாய்ப்புகள் குறைந்துள்ள நிலையில் வேறு தொழில்களில் (ரியல் எஸ்டேட், இலத்திரனியல் ஷோரூம்) ஈடுபட்டு வருகிறார்.

ஆனால் பா.ஜ.க. பொதுச் செயலாளர் வானதி சீனிவாசன் கூறுகையில், நமீதா பா.ஜ.க.வில் சேர்ந்து உறுதியாகவில்லை. இது பற்றி நான் ஏதும் கூற விரும்பவில்லை என்றார்.






புதுடில்லி ராஜ்காட்டில் மகாத்மா காந்தி சமாதியில் மியான்மார் எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சான் சூ கீ மலர் தூவி அஞ்சலி செலுத்துவதனைக் காணலாம்

# நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

(சென்னை)

தமிழகத்தில் இருக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இந்த வாரத்திலிருந்து, நிர்வாகத்துக்கும் ஆசிரியர் மற்றும் பிற ஊழியர்களுக்கு மிடையேயான தொழிற்சங்கப் பிரச்சினைகளால் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழகத்துக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது, பல்கலைக்கழகம் தனது வருவாயிலிருந்தும், அரசின் உதவியிலிருந்தும், சுமார் 70 சதவீத செலவுகளையே பூர்த்தி செய்ய முடிகிறது.

மீதமுள்ள 30 சதவீதத்துக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் மு.ராமனாதன் தெரிவித்தார்.

தொழிற்கல்வி மூலம் நன்கொடைகளை பெருமளவு பெறுவதாகக் கருதப்படும் இந்தப் பல்கலைக்கழகம் நல்ல நிதி நிலையில் இருப்பதாகவே பல ராலும் கருதப்படுகிறது.

எனவே நிதி நெருக்கடி எப்படி வந்தது என விளக்கிய துணைவேந்தர் ராமனாதன், தொழிற்கல்வி வகுப்புகளுக்கு, பல்கலைக்கழகம் அதிக கல்விக் கட்டணத்தை வசூலிக்கிறது என் பது உண்மைதான், ஆனால் நன்கொடைகள் எதுவும் வாங்கப்படுவதில்லை என்றார்.

## "சஸ்பென்ஸ்" இருந்தால்தான் படம் ஓடும் என்கிறார் கருணாநிதி

(சென்னை)

மத்திய அரசு மீது எதிர்க் கடசிகளால் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து செய்தியாளர்கள் திமுக தலைவர் கருணாநிதியிடம் கேட்டதற்கு, அது "சஸபென்ஸ்" எனப் பதிலளித்துள்ளார்.

செய்தியாளர்களைச் சந்தித்த கருணாநிதி, நான் நூறு திரைப்படங்களுக்கு மேல் கதை வசனம் எழுதியிருக்கிறேன்.

அந்தப் படங்களில் சஸ பென்ஸ் இருந்தால்தான், அந்தப் படம் நன்றாக ஓடும் அது போலத்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தி.மு.க.வின் நிலைப்பாடு சஸ்பென்ஸ் என்று கூறினார்.

மேலும் அந்நிய நேரடி



முதலீடுகளைப் பற்றி தி.மு.க தனது நாடாளுமன்றக் கட்சி உறுப்பினர்களையெல்லாம் அழைத்து கலந்து பேசி, நடுத்தர வியாபாரிகளின் நலன்களை முன் வைத்து ஆலோசித்து முடிவெடுத்து எங்கள் கருத்துக் களைத் தெரிவிப்போம் என்றும் கருணாநிதி கூறினார்.

## பால்தக்கரே கவலைக்கிடம்



(மும்பை)

சிவசேனா கட்சித் தலைவர், பால் தாக்கரேயின் உடல்நிலை கவ லைக்கிடமாக உள்ளது. சிவசேனா கட்சியின் மூத்த தலைவரான பாலதாக்கரே கடந்த சிலநாட்களாக உடல்க்ஷீணம் அடைந்தார்.

வயது மூப்பின் காரணமாக அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. சமீபத்தில் நடந்த தசரா விழாவில் கலந்துகொண்டு பேசுகையில், எனது உடல் நிலை சரியில்லை என்பதனை எனது தொண்டர்களுக்கு தெரிவித்து விட்டேன்.

எனது உடல்நிலையைச் சீராக்க மருத்துவர்கள் போராடி வருகின்றனர் என்றார். பால் தாக்கரே உடல் நிலை குறித்து, அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகையில், "பால் தாக்கரேக்கு செயற்கை சுவாசம் அளிக்கப்படவில்லை அதே நேரத்தில், ஒக்ஸிஜன் அளிக்கப்படுகிறது. அவரின் உடல் நிலை நன்றாக இல்லை அவர் உணவு எதுவும் ஏற்கவில்லை. இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் பால்தாக்கரே இல்லத்தில் சிவசேனா தொண்டர்கள் குவியத்தொடங்கி வருகின்றனர். முன்னதாக பால்தாக்கரே இல்லத்திற்கு முன்னாள் ஜனாதிபதி பிரதீபா பாட்டில், பொலிவுட் நடிகர் அமிதாப் ஆகியோர் நேரில் சென்று அவரது உடல் நலம் குறித்து விசாரித்தனர்.

# சீன புதிய ஜனாதிபதியாக ஜின்பிங் தெரிவானார்



(பீஜிங்)

சீனாவின் புதிய ஜனாதிபதியாக சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஸி ஜின்பிங் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதியிலிருந்து சீன ஜனாதிபதியாக இதுவரை காலமும் பதவி வகித்துவந்த ஹு ஜின்டோ பதவி விலகுவதாக அறிவித்ததை அடுத்து இவர் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சீனாவின் ஆட்சி அதிகாரத்தில் மாற்றம் செய்ய அந்நாட்டு ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்த நிலையில், இதற்கான கட்சியின் உயர்மட்டக் குழுக் கூட்டம் பீஜிங்கில் கடந்த 14 நாட்களாக நடைபெற்றது. இதன்போதே ஜனாதிபதி ஹு ஜின்டாவோ தான் பதவி விலகுவதை அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்தே சீனாவின் புதிய ஜனாதிபதியாக தற்போதைய உப ஜனாதிபதியான ஸி ஜின்பிங் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

# சிரிய அகதிகளுக்கு நிதியுதவி அமெரிக்க அரசு அறிவிப்பு

(சிட்னி)

சிரியாவில் ஜனாதிபதி அசாத்துக்கு எதிராக கடந்த 22 மாதங்களுக்கு மேலாக போராட்டம் நடந்து வருகின்றது.

இதனால் நடந்து வரும் உள்நாட்டு போரில் அப்பாவிபொதுமக்கள் பலர் பலியாகி வருவதுடன், அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சம் அடைகின்றனர்.

இவர்கள் துருக்கி, ஜோர்டான், லிபியா மற்றும் ஈராக் நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இந்த மக்களுக்கு அமெரிக்கா, அவுஸ்ரேலியா உள்ளிட்ட நாடுகள் நிதி உதவி அளித்து வருகின்றன.

இதற்கிடையில் அவுஸ்ரேலியா சென்றுள்ள அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், இராணுவ அமைச்சர் லியான் பெனட்டா ஆகியோர் நேற்று முன்தினம் அவுஸ்ரேலிய அமைச்சர்களை சந்தித்து பேச்சு நடத்தினர்.


இதுகுறித்து ஹிலாரி கிளிண்டன் கூறுகையில், சிரிய உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டு அகதிகளாகிய மக்களுக்காக ரூ.150 கோடி நிதி உதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது சிரியா மட்டுமின்றி அண்டை நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள அகதிகளுககும் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

# சூடானில் பரவும் மஞ்சள் காய்ச்சல்

# 50 கோடி மக்கள் பாதிப்படைவர்

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை



சூடானில் பரவி வரும் மஞ்சள் காய்ச்சலுக்கு இதுவரையில் 107 பேர் பலியாகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

சூடானில் உள்ள டார்ஃபர் பகுதியில் பரவி வரும் மஞ்சள் காய்ச்சலுக்கு, கடந்த ஒன்றரை மாதத்தில் மட்டும் 107 பேர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த நோய் நாடு முழுவதும் பரவ வாய்ப்புள்ளதாகவும் சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

கொசுக்களால் பரவி வரும் இந்நோயைக் கட்டுப்படுத்த உரிய மருந்துகள் அந்நாட்டில இல்லை.

எனினும் தடுப்பு நடவடிக்கைகளில் சூடான் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இக்காய்ச்சலால் ஆப்பிரிக்காவில் உள்ள 32 நாடுகளில் வாழும் 50 கோடி மக்களுக்கும் அச்சுறுத்தல் இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டு சூடானில் உள்ள தெற்கு கொர்டோபன் பகுதியில் மஞ்சள் காய்ச்சல் தாக்கி 160 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இணையத்தளங்களுக்கு அரபுலகில் கட்டுப்பாடு

(துபாய்)

ஆட்சி மாற்றம் கோரி, போராட்டம் வெடிக்கும் அபாயம் உள்ளதால், அரபுநாடுகளில், இணையத் தளங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. எகிப்து, துனிசியா, லிபியா, ஏமன் உள்ளிட்ட நாடுகளில், கிளர்ச்சியாளர்களின் தொடர் போராட்டத்தால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. தற்போது குவைத், பக்ரைன் உள்ளிட்ட நாடுகளிலும், எதிர்க்கட்சியினர் ஆட்சி மாற்றம் குறித்துப்போராட்டம் நடத்துகின்றனர். பல்வேறு இணையதளங்கள் மூலம், ஆட்சி மாற்றத்துக்கான தகவல் பரிமாறிக் கொள்ளப்படுவதால், இது போன்ற இணையத் தளங்களுக்கு அரபு நாடுகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய அரபு எமிரேட்டில், இணையத் தளங்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.



நாட்டுக்காக போரில் உயிர்த்தியாகம் செய்த வீரர்களை நினைவு கூரும் விதமான ஆர்மிஸ்டைஸ் தினம் பிரான்சில் கொண்டாடப்பட்டது. ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளின் தாக்குதலில் பலியான இராணுவ வீரர் ஒருவரின் குழந்தைகளுடன் சென்று அஞ்சலி செலுத்திய அந்நாட்டு அதிபர் பிரான்கோய்ஸ் ஹோலன்டே

# காஸா மீதான தாக்குதல்கள் விரிவுபடுத்தப்படுமென எச்சரிக்கை

பலஸ்தீனத்தின் காஸா மீது தாக்குதல் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு எந்நேரமும் தயார் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெயன்தாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் பலஸ்தீனத்தின் ஹமாஸ் இராணுவ குழுவினரின் மூத்த தலைவர் கலில் அல் ஜபரி கொல்லப்பட்டார்.

இதனையடுத்து இஸ்ரேல் பிரதமர் விடுத்துள்ள அறிக்கையில், ஹமாஸுக்கும் ஏனைய தீவிரவாத இஸ்லாமிய குழுவினருக்கும் நாங்கள் தெளிவான செய்தி ஒன்றை சொல்லியிருக்கிறோம்.

தேவை ஏற்படின் காஸா மீது இராணுவ நடவடிக்கையை விரிவுபடுத்த எந்நேரமும் தயார் நிலையில் உள்ளோம். எமது



மக்களை பாதுகாக்க எதையும் செய்வோம் என தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தின தாக்குதலில் கலில் அல் ஜபரி, ஹமாஸ் இயக்கத்தின் சில உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட 9 பேர் கொல்லப்பட்டனர். இதனை தொடர்ந்து இஸ்ரேல்- பாலஸ்தீனத்திற்கு இடையே பதற்றம் அதிகரித்துள்ளது.

கடந்த 1996ஆம் ஆண்டிலிருந்து, காஸாவின் ஹமாஸ் குழுவினரின் முக்கிய தலைவர்கள் பலர். இஸ்ரேலிய படையினரால் இலக்கு வைத்து கொல்லப்பட்டு வருகின்மை குறிப்பிடத்தக்கது.

# 50 மில்லியன் டொலர் அதிஷ்டம் அனுபவிக்காமல் துரத்திய துரதிஷ்டம்




50 மில்லியன் டொலர்கள் அதிஷடத்தை அனுபவிக்க இயலாமல் இரண்டு வருடங்கள் போராடிய, ஸ்காரபரோவில் உள்ள பெல் கனடா நிறுவன ஊழியர்களுக்கு இப்போது தான் நிம்மதி கிடைத்துள்ளது. இரண்டு வருடங்களுக்கு முன்பு பெல் கனடா ஊழியர்கள் 19 பேர் சேர்ந்து லோட்டோ மேக்ஸ் ஜாக்பாட் சீட்டு வாங்கியிருக்கிறார்கள். அந்த சீட்டுக்கு ஜனவரி 3ம் தேதி 2011ஆம் வருடம் 50 மில்லியன் டாலர் பரிசு கிடைத்திருக்கிறது. உற்சாகத்தில் துள்ளி குதித்திருக்கிறார்கள் அவர்கள்.

ஆனால் இந்த 19 பேரைத் தவிர வேறு சில ஊழியர்களும் நாங்களும் இந்தக் குழுவில் இருந்தோம். அதனால் எங்களுக்கும் பரிசுத் தொகையில் பங்கு உண்டு என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். பரிசுத் தொகையில் ஒரு பகுதியை இந்த 19 பேருக்குப் பிரித்துக் கொடுத்த நீதிமன்றம் மீதம் உள்ள தொகைக்கு விசாரனை நடத்தியது. அந்த விசாரணையின் தீர்ப்பு இப்போது வந்துள்ளது.

மீதம் உள்ள 18.4 மில்லியன் டொலர்களும் அந்த 19 பேருக்கு தான் உரிமை உள்ளது என்று தீர்ப்பளித்திருக்கிறது நீதிமன்றம். இது போன்ற குழுவில் பலர் உறுப்பினராக இருந்தாலும் பரிசு விழுந்த மாதம் யாரெல்லாம் சீட்டு வாங்க பணம் தந்திருந்தார்களோ அவர்களுக்கே பரிசுப் பணத்தில் உரிமை உண்டு என்று நீதிமன்றம் சொல்லியிருக்கிறது.

# அவுஸ்ரேலியாவில் தெரிந்த ஆண்டின் கடைசி சூரியகிரகணம்



இந்த ஆண்டின் கடைசி சூரிய கிரகணம் முழு சூரிய கிரகணம் என்பது குறிப்பிடத்தக்கது. இது அவுஸ்ரேலியாவின் வட பகுதியில் தெரிந்தது. வானியல் ஆய்வாளர்களுக்கு ஆச்சரியம் தரும் விதமாக நேற்று முன்தினம் சூரியன், சந்திரன் மற்றும் பூமி ஆகியவை ஒரே நேர் கோட்டில் வந்தன.

அந்நாட்டின் வடக்கு குயின்ஸ்லாந்து பகுதியில், ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள், சுற்றுலாவாசிகள் மற்றும் வானியல் நிபுணர்கள் ஆகியோர் இந்தக் கிரகணத்தைக் காண ஆவலுடன் கூடியிருந்தனர்.

கிரகணம் ஆரம்பித்த உடன் அந்தப் பகுதியில் இருள் சூழ்ந்தது. மேலும், கிழக்கு இந்தோனேஷியா, அவுஸ்ரேலியாவின் கிழக்கு பகுதியின் சில இடங்களிலும், நியூசிலாந்து, பப்புவா நியூகினியா மற்றும் சிலி, அர்ஜென்டினா ஆகிய நாடுகளின் தென் பகுதியிலும் தெரிந்தது. அவுஸ்ரேலியாவில் அதிகபட்சமாக 2 நிமிடங்கள் வரை இந்தக் கிரகணம் நீடித்தது. அடுத்த சூரிய கிரகணம் வருகிற 2015ஆம் ஆண்டு மார்ச் வரை நிகழாது என வானியல் நிபுணர்கள் தெரிவித்தனர்.

# நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் “தேசத்துக்கு நிழல்” மரநடுகை



(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் ‘தேசத்துக்கு நிழல்’ (தெயட்ட செவன) தேசிய மரநடுகை வேலைத்திட்டம் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் நேற்று முற்பகல் 9.37 மணிக்கு தொடக்கி வைக்கப்பட்டது.

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், ஆளணி உதவியாளர் மனுவல் பிள்ளை அன்னபாக்கியம், சமுர்த்தி முகாமையாளர் கௌரிதேவி நந்தகுமார், முகாமைத்துவ உதவியாளர் கணபதிப்பிள்ளை இந்திராணி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மெரிசிபபிலா அலன்ரின் மற்றும் பட்டதாரிப் பயிலுனர் உத்தியோகத்தர்கள் எனப் பலர் மரக்கன்றுகளை நாட்டிவைத்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதேச செயலர், ‘மரம் ஒரு வரம்’ மரம் நடுவதோடு நின்று விடாது அவற்றை சரிவரப் பேணிப்பாது காத்தல் வேண்டும் என கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியனும் கலந்து சிறப்பித்தார்.

## பொதுநலவாய...

கிடைத்தால் மட்டுமே இந்த அமர்வுகளில் பங்கேற்க முடியும் என பிரித்தானிய பிரதமர் தெரிவித்திருந்தார். பாரியளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாகவும் இவ்வாறான ஓர் பின்னணியில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்துவது பொருத்தமற்றது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த போதிலும் நூற்றுக்கணக்கானவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தாளையடியில்...

மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதியில் விபத்து இடம்பெற்றதால் அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டுள்ளது. பளை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட சடலம் மரண விசாரணைக்காக நேற்று யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

யாழ். நீதவான் சடலத்தைப் பார்வையிட்டதுடன், மரண விசாரணையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

எழுவைதீவை சொந்த இடமாகக் கொண்ட பங்குத்தந்தை குருநகரில் தற்போது வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (இ)

## யாழில்...

இந்த சுகயீன விடுமுறைப் போராட்டம் நடைபெற்றது.

நேற்றுக் காலை 7.00 மணி வரை இப்போராட்டம் நடைபெற்றது. அவசர சிகிச்சைப் பிரிவு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளில் தாதியர் ஒருசிலர் மட்டும் நேற்று பணியில் ஈடுபட்டிருந்தனர்.

தாதியர்களின் போராட்டத்தினால் நோயாளர் பராமரிப்புப் பணிகள் பாதிப்படைந்திருந்தன. சத்திரசிகிச்சைப் பிரிவு, நோயாளர் விடுதிகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

விடுதிகளில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்களுக்கான மருந்துகள், ஊசிகள் என்பன வைத்தியர்களாலும், தாதியர் பயிற்சி மாணவர்களாலும் வழங்கப்பட்டன. இதனால் நோயாளர்களே பெரிதும் பாதிப்படைந்தனர்.

எமது கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தாதவிடத்து போராட்டம் வலுவடையும் என்று சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் தெரிவித்தார். (இ)

## ஆளுநர் மாநாடு...

உள்ளிட்டவர்கள் யாழ். ரில்கோ விடுதியின் வாயிலில் வைத்து வரவேற்கப்பட்டு நிகழ்விடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

வடமாகாணத்தைப் பிரநிதித்துவப்படுத்தும் பாரம்பரிய இசை நடன கலையம்சத்துடன் கூடிய வரவேற்பு ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டது. 9 மாணவிகள் ஆளுநர்களுக்கு மலர் மாலை அணிவித்து வரவேற்று அழைத்துச் சென்றனர்.

தொடர்ந்து மாநாட்டு மண்டபத்திற்கு முன்பாக ஆரம்ப நிகழ்வாக மாகாண மற்றும் தேசியக் கொடியேற்றும் நிகழ்வு நடைபெற்றது. தேசியக் கொடியை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியும், வடமாகாணத்தின் கொடியை ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனும், ஏனைய மாகாணங்களின் கொடிகளை அந்த மாகாண ஆளுநர்களும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது பதவியேற்பின் மூன்றாம் ஆண்டு நிறைவு மற்றும் அவரது பிறந்த தினத்தையொட்டி ரில்கோ விடுதியின் முன்பகுதியில் செவ்விளநீர் கன்றுகளை 9 மாகாண ஆளுநர்களும் நாட்டிவைத்தனர். தொடர்ந்து ஆளுநர்கள் மற்றும் ஆளுநர்களின் செயலாளர்கள் ஆளுநர்களுடன் குழுப்படம் எடுத்துக் கொண்டனர்.

தொடர்ந்து மாநாட்டு மண்டபத்தில் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றது. பனை மரத்தின் உருவின் மத்தியில் அமைக்கப்பட்ட மங்கள விளக்குகளை ஆளுநர்கள் ஏற்றிவைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

சமநேரத்தில் ஆளுநர்களின் செயலாளர்கள், மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் செல்வி வசந்தி அரசரத்தினம் ஆகியோரும் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் வழங்க மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா வைபவரீதியாக 15 ஆவது ஆளுநர் மாநாட்டிற்குரிய தலைமைப் பொறுப்பை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கையளித்தார்.

தொடர்ந்து தலைமையுரையை ஜி.ஏ.சந்திரசிறி நிகழ்த்தியதைத் தொடர்ந்து மூடிய அறையில் ஆளுநர்களின் சம்மேளன மாநாடு ஆரம்பமாகியது.

இந்த மாநாட்டில் வருடாவருடம் ஒவ்வொரு மாகாணத்திலும் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல்களின் முன்னேற்றம் குறித்து கருத்துப் பகிர்ந்ததுடன் ஆளுநர்களிடையே பொதுவான தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை பிற்பகல் நிகழ்வாக பி.ப. 2.30 மணிக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ‘மாகாண சபைகள் ஊடாக பிராந்திய அபிவிருத்தியும் அதன் சவால்களும்’ எனும் தொனிப்பொருளில் நீண்ட விளக்கவுரையை வழங்கினார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட திணைக்களங்களின் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாகாண சபையினர் தமது கேள்விகளையும் இவ்விடயம் தொடர்பாக மத்திய வங்கியின் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் மத்திய வங்கியின் ஆளுநர், ஆளுநர்களுக்கு மத்திய வங்கியின் நினைவு நூலின் பிரதிகளை வழங்கி வைத்ததுடன், வடமாகாண ஆளுநரினால் மத்திய வங்கி ஆளுநருக்கு நினைவுப் பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அத்துடன் நிகழ்வில் கலந்துகொண்டிருந்த நிதி ஆணைக்குழுவின் தலைவருக்கு நினைவுப் பரிசுவழங்கி வடமாகாண ஆளுநர் கௌரவித்தார்.

இறுதி நிகழ்வான மாலை 7.00 மணிக்கு கலைநிகழ்வுகள் இடம்பெற்று மாநாடு இனிதே நிறைவெய்தியது. (பா)

## கடமை தவறியது...

சார்லஸ் பெட்ரி தலைமையிலான குழுவினர் கடந்த எட்டு மாதங்களாக இவ்விடயம் தொடர்பாக விசாரணை நடத்தி இந்த அறிக்கையை தயாரித்துள்ளனர். ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்புப் பேரவை, மனித உரிமைப் பேரவை, செயலகம், முகவர் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து அமைப்புக்களும் உரிய முறையில் தமது கடமைகளை உரிய முறையில் செய்யவில்லை என பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை முரண்பாடுகள் நிலவும் நாடுகளில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பங்களிப்பு தொடர்பான பாடங்களைக் கற்றுக் கொடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் குறித்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு உடனடியாக சிரேஷ்ட உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றை நியமிக்க உள்ளதாகவும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் விரைவில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சார்லஸ் பெட்ரி தலைமையிலான குழுவின் மீளாய்வு அறிக்கையை பகிரங்கப்படுத்த தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கையை பகிரங்கப்படுத்துவதன் மூலம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## இன முரண்பாடுகளின்...

காரணத்தை நாம் முற்றாக நீக்க வேண்டும்.

இதற்கெல்லாம் காரணமாக இனமுரண்பாடுகளின் விளைவே அமைந்திருந்தன. இனமுரண்பாட்டுக் கூறுகள் இன்னும் அப்படியேதான் உள்ளன. இந்த முரண்பாடுகளை நாம் நீக்காமல் எதிர்காலத்தைப் பற்றி நாம் சரியாகத் திட்டமிட முடியாது.

இதுவே கடந்த கால அனுபவமாகும். எவ்வளவு பணத்தையும் எவ்வளவு மனித உயிர்களையும் இனமுரண்பாட்டின் காரணமாக இழந்திருக்கிறோம் என்று கணக்கிட்டால் இதனுடைய பெறுமதியைப் புரிந்து கொள்ளலாம்.

காரணங்களைச் சொல்லி, ஒருவர் மீது ஒருவர் பொறுப்புகளைச் சுமத்தி, ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி இந்தப் பிணக்கைத் தீர்க்க முடியாது.

வீட்டிலிருந்து வெளியேறிப்போகும்போது திரும்பவும் வீட்டுக்குப் பாதுகாப்பாக வரமுடியுமா? என்ற சந்தேகம் இருந்த காலம் ஒன்று இருந்தது. அதை நாம் நினைவில் வைத்திருந்தால், இந்தப் பிரச்சினையை இன்னும் இழுத்தடிக்க மாட்டோம்.

பிரச்சினைகளின் மத்தியிலும் முரண்பாடுகளின் மத்தியிலும் நாம் எந்த முன்னேற்றத்தையும் இலகுவாக எட்டிவிட முடியாது. எந்த நன்மையான இலக்குகளையும் எட்டிவிட முடியாது.

சாண் ஏற முழம் சறுக்கும் என்பார்கள். அதைப்போல எமது திட்டங்களின் முன்னேற்றத்தை பிரச்சினைகளின் தீவிரம் கீழே இறக்கி விடும்.

எனவேதான் நாங்கள் அரசாங்கத்துடன் இணைந்து நிற்கும் போதும் பிரச்சினைகளுக்கான தீர்வை வலியுறுத்துகின்றோம்.

எத்தகைய அபிவிருத்திப் பணிகளைச் செய்தாலும் அவையெல்லாம் நிரந்தரமானவையாக அமையுமா? என்ற கேள்வி மக்களிடம் உள்ளது. இதற்குக் காரணம், மீண்டும் அமைதியற்ற காலம் ஒன்று உருவாகுமா?

தீர்க்கப்படாத பிரச்சினைகள் எதிர்காலத்தில், என்னமாதிரியான விளைவுகளை ஏற்படுத்தும்? என்ற கேள்விகள் மக்களின் மனதிலே உள்ளன. பிரச்சினைகளை நாம் தீர்க்காமல் வைத்திருப்போமானால், அதை வைத்துக்கொண்டே வெளிச் சக்திகள் எமது நாட்டில் மூக்கை நுழைக்கும். இதை நாங்கள் இன்று நடைமுறையில் காண்கிறோம்.

கடந்த காலத்தில் நடந்ததும் இதுதான். வெளிச்சக்திகள் இலங்கையில் தலையீடுகளைச் செய்வதற்கான வாய்ப்பை நாங்களே வழங்கியிருக்கிறோம். இப்பொழுதும் இதுதான் நடக்கிறது.

யுத்தம் முடிந்தாலும் யுத்தகால நடவடிக்கைகள் உருவாக்கிய நெருக்கடிகளில் இருந்து நம்மால் மீள முடியவில்லை. அந்த அழிவுகள் எங்களை இன்னும் பல காலத்துக்கு நெருக்கடிக்குள்ளாக்கும்.

இந்த வரவு - செலவுத் திட்டத்தின் ஒரு குறிப்பிட்ட தொகை நிதி ஒதுக்கீடும் கரிசனையும் யுத்தகால நடவடிக்கைகளின் விளைவுகளுக்காகவே செலுத்தப்பட்டுள்ளன.

அதைப்போல சர்வதேச அரங்கில் நிலவும் இலங்கை தொடர்பான நெருக்கடி நிலையும் யுத்தத்தின் விளைவுகளே. இலங்கையைப் பற்றிய இன்றைய அபிப்பிராயங்களும் அழுத்தங்களும்கூட யுத்த கால நிகழ்ச்சிகளின் விளைவுகளே என்பதை நாம் மறுக்க முடியாது.

எனவேதான் நான் இந்த அவையில் மீண்டும் மீண்டும் இந்த விசயத்தை அழுத்திக் கூறி வருகிறேன். நிலையான அமைதித் தீர்வொன்றை எட்டுவதே நாட்டின் அபிவிருத்திக்கும் நல்லிணக்கத்துக்கும் அடிப்படையாக அமையும் என்று கூறுகிறேன்.

அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் வாய்ப்புகளை வழங்கும் தூரநோக்கோடு நல்லதொரு வரவு - செலவுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினையின் தீர்வை முன்னகர்த்துவதற்காக, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக, அதற்கான ஏற்பாடுகளுக்காக நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைதிக்கான விசேட கவனத்தை அரசாங்கம் கொண்டிருக்கிறது என்பதை இது வெளிப்படுத்துகிறது.

அபிவிருத்தி நடவடிக்கையில் நல்லிணக்கச்செயற்பாடும் ஒரு அங்கமே. அது ஒரு முக்கியமான பகுதியே என்பதை அரசாங்கம் தன்னுடைய சிந்தனையில் கொண்டுள்ளது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும். ஆகவே, இது நல்லதொரு நடவடிக்கை என்பதே என்னுடைய அவதானிப்பாகும்.

சிறுபான்மையின மக்களின் நலன்களையும் அவர்களுடைய மனங்களையும் திருப்தியளிக்கும் விதத்தில் பேண முற்படும்போதே நாட்டில் உறுதித்தன்மை உருவாகும்.

அப்போதுதான் நம்மால் எதிர்பார்க்கப்படுகின்ற சகோதரத்துவம் ஏற்படும். நாம்விரும்புகின்ற அடைவுகளை அடைய வேண்டுமானால், அதற்கான அடிப்படைகளை முதலில் உருவாக்க வேண்டும்.

இதன் தொடர்ச்சியாகவே நாம் நாட்டை முழுமையான உறுதித் தன்மைக்குக் கொண்டு செல்ல முடியும். அதை நீடித்த அமைதியினாலேயே உருவாக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

# கைப்பணிப் பொருட்கள் ஏற்றுமதித் தரத்தில் உற்பத்தி



(கொழும்பு)

ஏழாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு தொடர்பான ஆலோசனைக் குழு அலுவலகத்தின் ஏழாவது கூட்டம் நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தின் 1 ஆவது இலக்க குழு அறையில் இடம்பெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீ.எண்டனி விக்டர் பெரேரா, புத்தளம் மாவட்டம் சார்பில் நான்கு தேவைகளை முன்வைத்து அவற்றை நிறைவேற்றித் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

கைப்பணித்துறை சார்ந்த பயிற்சிகளைப் பெற்றல், களிமண் அரைக்கும் இயந்திரம், உடலலங்கார மற்றும் உணவு தொழில்நுட்ப பயிற்சிகள் பெறுதல் மறறும் கைத்தொழிற்சாலை அமைதல் போன்ற தேவைகள் அவரால் முன்வைக்கப்பட்டன.

களிமண் சார்ந்த சிறுகைத் தொழிலை முன்னேற்றும் வகையில் மின்சார இயந்திரங்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் குருனாகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க பண்டாரநாயக்க வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

கித்துள் உற்பத்தி மேம்பாடு தொடர்பில் அமைச்சர் வாசுதேவ நானயக்காரவும் கைப்பணித்துறை சார்ந்த உற்பத்திகளின் மேம்பாடுகள் மற்றும் சுயதொழில் முயற்சிகள் ஊக்குவிப்பு தொடர்பில் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவும் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

கோரிக்கைகள் தொடர்பில் அவதானஞ் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசேட தேவைகள் தொடர்பில் அமைச்சரவை பத்திரம் மூலம் அடுத்த வருடம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

களிமண் சார்ந்த கைப்பணிப் பொருட்களை ஏற்றுமதித் தரத்தில உற்பத்தி செய்வதற்கு உரிய தொழில்நுட்ப பயிற்சிகளை தனது அமைச்சு வழங்கும் என்றும் அதன் ஊடாக அக்கைப் பணிப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு இயலும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தனது அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் மூலம் உரிய தொழில்நுட்ப மற்றும் தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டு அப் பயிற்சிகளை பெறுகின்றவர்களுக்கு வாழ்வின் எழுச்சித் திட்டத்தின மூலம் மூலப் பொருட்களுக்கான உதவித் தொகையையும் வங்கிக் கடன்களையும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இங்கு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபை, தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் தேசிய வடிவமைப்புச் சபை ஆகிய நிறுவனங்களின் 2010 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைகளும் கணக்கு அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

பிரதி அமைச்சர்களான வீரகுமார திஸாநாயக்கா, சரண குனவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர் அசன் அலி, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, ஆலோசகர் வீ.ஜெகராசசிங்கம், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் கே.தயானந்தா, இணைப்புச் செயலாளர்கள் ராஜ்குமார், சந்திரலால், மேலதிக செயலாளர்கள், நிறுவனங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் மற்றும் ஏனைய துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# கள்ளமரம் கடத்தல்; தெற்கு வியாபாரிகள் கைது

கரிகாலன் நாகபடுவான் காட்டுப்பகுதியில் கள்ளமரம் வெட்டிய தென்பகுதி மர வியாபாரிகள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காட்டுக்குள் புகுந்து முதிரை மற்றும் பாலை மரங்களை வெட்டி 3 லொறிகளில் ஏற்றி கடத்திச் செல்ல முற்பட்டபோது பொலிஸாரிடம் இவர்கள் சிக்கிக் கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் பூநகரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட மூவரும் அவர்களது வாகனங்களும், மரக்குற்றிகளும் கிளிநொச்சி நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டதுடன் வழக்கு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இம்மூவரும் 14 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். (149)

# இராணுவத்தில் தமிழ்ப் பெண்கள்

(கொழும்பு)

இராணுவத்தில் தமிழ்ப் பெணகள் இணைத்துக் கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை இராணுவத்தில் சுமார் 100 தமிழ்ப் பெண்கள் உள்வீர்க்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. நாளை சனிக்கிழமை கிளிநொச்சி பாரதிபுரத்தில் நடைபெறவுள்ள நிகழ்வு ஒனறில் இவ்வாறு பெண்கள் இணைதுக்கொள்ளப்பட உள்ளனர்.

இலங்கை மகளிர் இராணுவத்தின் தன்னார்வ படைப்பிரிவில் இந்தப் பெண்கள் இணைத்துக்கொள்ளப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆரம்பகட்ட பயிற்சிகளின் பின்னர் குறித்த தமிழ்ப் பெண்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடமையில் அமர்த்தப்பட உள்ளனர்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட தமிழ் யுவதிகளே இவ்வாறு இராணுவத்தில் உள்ளீர்க்கப்பட உள்ளனர்.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கவனயீர்ப்புப் போராட்டம்



வரவு ஒழுங்கின்மை மற்றும் விடுதி ஒழுக்கம் பேணாமை போன்ற காரணங்களினால் பரீட்சை எழுத அனுமதி வழங்கப்படாத மாணவர்களை பரீட்சை எழுத அனுமதிக்குமாறு கோரி நேற்றுக் காலை வந்தாறு மூலை கிழக்குப் பல்கலைகழகத்தில் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் சட்ட விதிகளுக்கு அமைய கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்களில் இருவர், வரவு ஒழுங்கின்மை மற்றும் விடுதி ஒழுக்கம் பேணாமை போன்ற காரணங்களினால் பரீட்சைக்கு தோற்றுவதில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர். எனினும், இவர்களை பரீட்சைக்கு உள்ளீர்க்க வேண்டும் எனக் கோரி பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் இந்த கவன ஈர்ப்புப் போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் புதிய மின்மாற்றி நிறுவுவதற்காகவும் இன்று காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணி வரையும் அளவெட்டி, மல்லாகம் ஒரு பகுதி, பன்னாலை, வித்தகபுரம், சிறுவிளான், விளான், அம்பனை, கோண்டாவில், இருபாலை வீதிப் பிரதேசம், மந்திகை, கிராமக்கோடு, தம்பசிட்டி, ஓராம் கட்டை சந்தி, சாரையடி, புலோலி, பருத்தித்துறை நகரப் பிரதேசம், பாரதி வீதி, கம்பர்மலை ஆகிய இடங்களிலும்,

நாளை சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரையும் உரும்பிராய், கோண்டாவில், மருத்துவ பீடப்பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி, யாழ் மாநகரசபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, நாச்சிமார் கோவிலடி முதல் தட்டார்தெரு ஊடாக மனோகரா தியேட்டர் வரையான பிரதேசம், கரந்தன், ஊரெழு, நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், செம்மணி, அரியாலை, நாவற்குழி, கைதடி, கைதடி வடக்கு, நுணாவில், சாவகச்சேரி, மட்டுவில் ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் உரும்பிராய், கோண்டாவில், மருத்துவ பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி, யாழ் மாநகர சபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, நாச்சிமார் கோவிலடி முதல்தட்டார் தெரு ஊடாக மனோகரா தியேட்டர் வரையான பிரதேசம், கரந்தன், ஊரெழு, நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் பிரதேசங்களிலுள்ள மின் விநியோக மார்க்கங்களுக்கு இடையூறாகவுள்ள மரங்கள், மரக்கொப்புக்கள், தென்னை ஓலைகள், பனை ஓலைகள் என்பவற்றை வெட்டியகற்றி தடையற்ற மின்சார விநியோகத்தை பெற்றுக் கொள்ள மினசார சபைக்கு உதவுமாறு பொதுமக்களை கேட்டுக் கொள்கின்றோம் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# பஸ்களுக்கு வர்ணக் "குறி"

பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பஸ்களை இனங்காணும் வகையில் வெவ்வேறு நிறப்பூச்சுக்களைப் பூசுவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம கையளித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி கிடைத்துள்ளது. இலகுவாக இனங்காணும் வகையிலேயே இந்த நிறங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் சிவப்பு நிறத்திலும், தனியார் பஸ்கள் நீல நிறத்திலும் பாடசாலை பஸ்கள் மஞ்சள் நிறத்திலும் வெவ்வே[illegible] நிறங்களால் வகைப்படுத்தப்ப[illegible] வுள்ளன.

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 45 இலட்சம் ஆகும். இ.போ.ச மற்றும் தனியார் பஸ்களின் எண்ணிக்கை 20 ஆயிரம் ஆகும்.

அத்துடன், முச்சக்கரவண்டிகள், கார்கள் மற்றும் கெப் ரக வாகனங்களின் தொகை 7 இலட்சம். பாடசாலை மாணவர்கள் பயணிக்கும் வான்களின் எண்ணிக்கை 2 ஆயிரம் எனக் கணக்கிடப்பட்டுள்ளதாக மேற்படி அமைச்சரவைப் பத்திரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பனை உற்பத்திகள்

# ஆளுநர்களுக்கு விசேட பொதி

(யாழ்ப்பாணம்)

ஆளுநர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக யாழ். வந்திருந்த ஆளுநர்களுக்கு நேற்றைய தினம் ஆளுநர் மாநாட்டின் போது வடமாகாணத்தின் பெருமை பேசும் நூல்கள், இறுவட்டுக்கள் வெளியிடப்பட்டு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஆகியோர் ஆளுநர்களுக்கு வழங்கிவைத்தனர்.

அத்துடன் வடமாகாணத்தின் பாரம்பரிய உணவுப் பொருட்கள் அடங்கிய பனையோலைப் பை ஒன்றையும் ஆளுநர்களுக்கு வடமாகாண சபையினர் வழங்கி வைத்தனர்.

அத்துடன் இந்நிகழ்வின் போது வட மாகாண கலை, கலாசார, பாரம்பரியங்களை வெளிக்கொணரும் கலை நிகழ்வுகளை நிகழ்த்திக் காண்பித்த வடக்கு மாணவர்களுக்கும் ஆளுநர்கள் பரிசுப் பொதிகளையும் வழங்கிக் கௌரவித்தனர். (பா)

# பொலிஸ் பரிசோதகருக்கு பிடியாணை

(கொழும்ப)

கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவின் பொலிஸ் பரிசோதகரை கைது செய்யுமாறு ஹோமாகம நீதவான் நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளது. கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவின் பொலிஸ் பரிசோதகரான எம்.பி.சுதேச விஜேயசிங்கவை கைது செய்யுமாறே ஹோமாகம நீதவான் நீதிமன்ற நீதிபதி வை.ஆர். நெலும்தெனிய உத்தரவிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போனமை தொடர்பாக அவரது மனைவி சந்தியா எக்னெலிகொடவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவின் பொலிஸ் பரிசோதகர் எம்.பி. சுதேச விஜேயசிங்க பிரதான சாட்சியாளராவார். இது தொடர்பிலான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுதது்க்கொள்ளப்பட்ட போது அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை அதனையடுத்தே மேற்படி வழக்கை டிசம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதவான் அவரை கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 நவம்பர் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.